சிலம்பு மேகலை

பா. சிவராமகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்பு மேகலை

பா. சிவராமகிருஷ்ணன்

ஞானகுருபர நிலைய வெளியீடு
1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்பு மேகலை

முதற்பதிப்பு டிசம்பர் 1970
பதிப்புரிமை ஆக்கியோனுக்கு

ஆக்கியோன்:

பா. சிவராமகிருஷ்ண சர்மா B. Sc. (Ceylon)

வெளியீடு:

ஞான குருபர நிலையம்–வெளியீடு 2.
82/5, ஆட்டுப்பட்டித் தெரு.
கொழும்பு-13.

பிரசுரம்:

ஆனந்தா அச்சகம்.
82/5, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

முன்னுரை

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், கதையாலும் காலத்தாலும் தொடர்பு கொண்டவை. மணிமேகலை சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியான கதைப்போக்கினைக் கொண்டது. சிலம்பு, கண்ணகி கோவலன் மாதவி வரலாறு கூற, மேகலை, கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாறு கூறுகின்றது.

இவ்விரு காப்பியங்களிலும் சொல்லொப்புமை, வாக்கியத் தொடர்ப்புமை அடியொப்புமை, உவமையொப்புமை, உருவக நடையொப்புமை போன்ற பல்வேறு ஒப்புமைகள் இருப்பது நோக்கற்பாலது.

இவ்விரு காப்பியங்கள் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுமாறு நண்பர்கள் சிலர் வற்புறுத்தி வந்தனர். அவ்வற்புறுத்தல்களின் பிரதிபலிப்பே இந்நூல். இந்நூலை வெளியிடும் கொழும்பு ஞானகுருபரன் நிலையத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றி.

ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SILAMPU MEHALAI
First edition, Dec. 1970
copyright reserved

Author:
B. Sivaramakrishna Sarma, B. Sc (Ceylon)

Publisher:
Gnanagurupara Nilayam
82/5, Wolfendhal Street
Colombo 13.

Printers:
Ananda Press
82/5, Wolfendhal Street
Colombo 13.

பொருளடக்கம்

1. சிலப்பதிகாரத்தில் கோவலன் நிலை — 5
(ஈழநாடு)

2. கோவலன் காட்டிய பழி — 12
(சென். ஜோசப் கல்லூரி சஞ்சிகை)

3. சிலப்பதிகாரம் காட்டும் நுதல் விழிநாட்டத்து இறையோன் — 15
(வீரகேசரி)

4. சிலப்பதிகாரம் காட்டும் முருகப் பெருமான் — 21
(வீரகேசரி)

5. சிலப்பதிகாரம் காட்டும் சூரிய வழிபாடு — 26
(வீரகேசரி)

6. இரட்டைக் காப்பியங்கள் கூறும் இந்திரவிழா — 29
(வீரகேசரி)

7. சிலப்பதிகாரம் காட்டும் புராண இதிகாசங்கள் 35
(வீரகேசரி)

8. மணிமேகலை காட்டும் புராண இதிகாசங்கள் 42
(வீரகேசரி)

9. கண்ணகி திருமணம் — 48
(தினகரன்)

10. இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள் — 53
(வீரகேசரி)

11. மணிமேகலை காட்டும் பௌத்த நெறி — 60
(ஸ்ரீ லங்கா, சேசத்த, சங்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா. 1-50

சிலப்பதிகாரத்தில் கோவலன் நிலை

சோழர் தலைநகராம் காவிரிப்பூம்பட்டினத்தில், மன்னன் மதிக்கும் மாண்போடு வாழ்ந்த குடும்பத்தில் பிறந்த வணிகன், கோவலன். இவன் தந்தை மாசாத்துவான் என்பவன். மாசாத்துவான் என்பது குடிப்பெயர் என்று ஒரு சிலர் கூற, அது இயற்பெயர் என்று வேறு சிலர் கூறுகின்றனர். கோவலன் மாநாய்கன் என்ற புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்த கண்ணகியென்னும் கற்புக்கரசியை மணம் செய்து கொண்டான் எனக் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

கோவலன் தன் மனைவியாகிய கண்ணகிமீது கொண்டிருந்த அளவற்ற காதலைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகின்றது:

தாரு மாலையும் மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலின் திருமுக நோக்கிக்
கோவலன் கூறுமோர் குறியாக்கட்டுரை

கோவலன் கண்ணகி மேல் கொண்டிருந்த தீராக் காதல், மாதவியின் உறவு உண்டானதும், மாதவியை விட்டுப் பிரிவதென்பதையே எண்ண முடியாததொரு விருப்பமாக மாறுகின்றது. இதனைக் கீழ்வருமாறு சிலப்பதிகாரம் இயம்புகிறது:

விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
விடு நீங்கு சிறப்பின் மனையகம் மறந்தென்

கோவலன் கண்ணகியை ஒருபோதும் வெறுக்கவில்லை. அவளை வெறுப்பதற்கு அவளிடம் எந்த விதமான குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் அவனால் காணமுடியவில்லை. மாதவியிடம் கண்ட கலையினால் கவரப்பட்ட கோவலன், கண்ணகியை விட்டுப் பிரிந்து அவளை மறந்தான். இதற்குக் காரணம், முற்பிறப்பில், கண்ணகி தன் கணவனுக்காகக் காக்கவேண்டியதொரு நோன்பினைத் தவறவிட்டாள் என்பதைக் கீழ்க்காணுமாறு மொழிகின்றது சிலப்பதிகாரம்:

………… கணவற் கொரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில்

இன்ப வாழ்க்கை வாழ்ந்து வந்த கோவலனும் மாதவியும், இந்திரவிழா பூர்த்தியாகும் சித்திரைத் திங்களிலொருநாள், வைகறைப் பொழுதில், காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரைச் சோலைக்குச் சென்றனர். இந்திர விழாவில், ஆடல் பாடல்களை நிகழ்த்திய மாதவி, தன்பால் ஊடல் கொண்டிருந்த கோவலனை மகிழ்விக்கப் பத்து வகைத் துவர், ஐவகை விரை, முப்பத்திரண்டு வகை ஓமாலிகை போன்றவை ஊறிய நன்னீரினால், நறுமணம் கமழும் நெய் தோய்ந்த கூந்தல் நலம் பெறுமாறு நீராடிப் புகையிட்டு ஈரம் புலர்த்தி மன்மதக் கொழுஞ்சேறு எனப்படும் கஸ்தூரிக் களியினையூட்டித் தன்னை அழகு படுத்தினாள். பின் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு போன்றவற்றைப் பூசினாள். முடக்கு மோதிரம், வயிரமோதிரம், மாணிக்கமோதிரம் போன்ற பல்வகை அணிகலன்களையும், பீலி, காலாழி, பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி, குறங்குசெறி, விரிசிகை, மாணிக்க வைரங்களால் இழைக்கப்பட்ட சூடகம், செம்பொன் வளையல்கள், பரியகம், தாலிசெறி, சரடு, வீரச்சங்கிலி, சவடி, சரப்பளி, குதம்பை போன்ற பல்வேறு அணிகலன்களையெல்லாம் அழகுற அணிந்து கோவலனிடம் வந்தாள். இதிலிருந்து கோவலன், அழகு என்னும் கலையை இரசிப்பதில் எவ்வளவு நுட்பமானவன் என்பதை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். பாடற்கலையை ஏழு

வருடங்கள் பயின்று, அதில் கைதேர்ந்த மாதவியே மகிழுமாறு அகச்சுவை அமைந்த வரிப்பாடல்களை இசைத்தான். அப்பாடல்கள் கோவலன் வேறொரு பெண்ணிடம் மையல் கொண்டு விட்டது போலப் பொருள்படக் கூடியனவாகவும் அமைந்தன. மாதவி, அதனைத் தவறாகக் கருதாமல், அவனுடைய பாடல்களுக்கு எதிரான வரிப்பாடல்களைப் பாடினாள். மாதவி, தான் வேறொருவன்பால் காதல் கொள்வதாகவும் பொருள்படக் கூடிய பாடல்கள் அவை. விளையாட்டு வினையாகியது. கோவலன், மாதவியின் பாடல்களை உண்மையெனக் கருதி அவளை விட்டுப் பிரிந்தான். இதற்குக் காரணம் ஊழ்வினையென்றே சிலப்பதிகாரம் உரைக்கின்றது.

மாதவி வசந்தமாலை என்ற தோழியிடம் தாழையின் வெண்ணிறத் தழையினையே சுவடியாகவும், பித்திகை அரும்பினையே எழுதுகோலாகவும், செம்பஞ்சுக் குழம்பினையே வண்ணக் கலவையாகவும் கொண்டு வரையப்பட்ட காதல் மடலை சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை, வெண் பூமல்லிகை, வெட்டிவேர், செங்கழுநீரின் மெல்லிதழ் போன்றவற்றால் தொடுக்கப்பட்ட மாலையின் மத்தியில் வைத்து, கலாரசிகனான கோவலனிடம் கொடுக்குமாறு தூதனுப்பினாள். கோவலனோ,

ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடு பெற்றவப் பைந்தொடி தனக்கென

என்று கூறி மாதவியின் மடலைப் பெற மறுத்தான். மாதவியிடமிருந்து பிரிந்து வந்த கோவலனுக்கு அப்பொழுது அவள் மீது வெறுப்பு ஏற்பட்டதேயொழிய எவ்விதமான மனவருத்தமும் ஏற்படவில்லை.

கோவலன் தன் அன்பு மனைவியிடம், மாதவியைப் பற்றிக் கீழ்க்காணுமாறு இழித்துக் கூறுவதால் அவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய புறங்கூறுந் தன்மையை உணர்ந்து கொள்ள லாம்.

சலம் புணர் கொள்கைச் சலதியொடாடிக்
குலம் தருவான் பொருட் குன்றத் தொலைந்த
இலம்பாடு நாணுந் தருமெனக் கென்ன

மாதவியின் உறவால், கோவலன், தன் முன்னோர் அளித்த அரும் பெருஞ் செல்வத்தையெல்லாம் இழந்து விட்டதாகக் கூறினான். ஆனால் உண்மையில் கோவலன் தான், தன் மலை போன்ற செல்வம் அழிந்தமைக்குக் காரணமாகவிருந்தான். அவன் தன் தொழிலைச் சரிவர நடத்தாமையினால் செல்வம் சீர்குலையத் தொடங்கியது. அந்நிலையிலும் தன், சீர் குலைந்த செல்வ நிலையை ஆராய்ந்து பார்க்காது பெருங் கொடை வள்ளலாகத் திகழ்ந் தான்.

உதாரணமாக, கோவலன் தன் குழந்தையின் பெயர் சூட்டுவிழாவன்று, ஞானமார்க்கத்தில் வாழும் ஒருவன், தளர்ந்த நடையுடன் ஊன்றுகோலே தஞ்சமென, கோவலனிடம் தானம் பெற வந்த பொழுது, மதம் கொண்ட யானையொன்று, அவ் வயோதிபனைத் தாக்க முற்படுகையில், கோவலன் மத யானையுடன் போராடி அதனைக் கட்டுப் படுத்தினான். இது கோவலனுடைய அஞ்சா நெஞ்சத்திற்கும், வீரத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளது.

அந்தணனொருவன் கீரிப்பிள்ளையொன்றினை அன்புடன் வளர்த்து வரும்பொழுது, அது அவனுடைய குழந்தையின் அருகில் வந்த பாம்பொன்றைக் கொன்றுவிட்டு இரத்தம் சொரியும் வாயுடனேயே வந்தது. அந்தணன் மனைவி தன் குழந்தையைத்தான் கீரிப்பிள்ளை கொன்று விட்டதென, ஆராய்ந்து பாரமல் அதனைக் கொன்று விட்டாள். அந்தணன் தான் அன்புடன் வளர்த்து வந்த கீரியைத் தன்

மனைவி அநியாயமாகக் கொன்று விட்டதை அறிந்து அவளை விட்டகன்றான். இதனைத் தற்செயலாக அறிந்த கோவலன், அந்தணன் மனைவி செய்த பாவங்கள் அகல தான தர்மங்கள் செய்து அந்தணனுக்கும் பெரும் பொருள் கொடுத்து அவர்களை ஒன்று சேர்த்து வைத் தான்.

இப்படியான நல்லறங்களையே செய்து வந்த கோவலன் மாதவியுடன் வாழ்ந்த காலத்தில், தன் குலத் தொழிலாகிய வாணிபத்தை சரிவர நடாத்தியதாகத் தெரியவில்லை. எனவே, கோவலனிடமிருந்த மலைபோன்ற செல்வம் கரைந்ததில் வியப்பொன்றுமில்லை.

கோவலன் காமம் கொண்டலையவில்லை. அப்படியிருந்திருந்தால் மாதவியையன்றி மற்றும் பல பெண்டிரை அடைந்திருப்பான். அவனது கலையார்வமே மாதவியிடம் மனதைப் பறி கொடுக்கச் செய்து கண்ணகியைப் பற்றிய நினைவை மறக்கச் செய்தது.

கண்ணகி அளித்த சிலம்பினையே முதலாகக் கொண்டு இழந்த செல்வத்தையெல்லாம் மீட்க மதுரைக்கு கண்ணகியைக் கௌந்தியடிகள் துணையுடன் அழைத்துச் சென்றான் கோவலன். அவன் மனம் வருந்தி உடல் மெலிந்து, உருக்குலைந்திருந்த வேளையில், கௌசிகன் என்ற அந்தணன், மாதவி கொடுத்தனுப்பிய இரண்டாவது திருமுகத்தைக் கொண்டு வந்தான். மாதவி, தன்னோடு வாழ்ந்திருந்த போது பூசியிருந்த நறுமண நெய்யின் மணம் கமழ்வதையறிந்த கோவலன் ஏட்டினை மறுக்க முடியாத மன நிலையில் கையேற்றான். தான் செய்த பிழைகளை மன்னித்து விடுமாறு காதற் குழைவுகளின்றி இருந்ததை தன் பெற்றோருக்கும் அனுப்ப ஏற்றதாகவிருந்ததால், கௌசிகன் மூலமாகவே அனுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின், தான் செய்த குற்றங்களை உணர்ந்து உள்ளம் குமுறிய கோவலன்,

இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழு எனும் பாரேன்

எனத் தன் மனத்துயரை வெளியிடுவதாகக் காட்டுகின்றது சிலப்பதிகாரம். இது அவனுடைய தெளிவற்ற மன நிலையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மதுரை மாநகரிலே கோவலன், கண்ணகியை மாதரி பால் விட்டு, அவள் கொடுத்த ஒற்றைக் காற்சிலம்பினைக் கொண்டு சென்று, பொற்கொல்லன் சூழ்ச்சியால் கொல்லப்படுகிறான். கோவலன் கொலை அவன் முற்பிறப்பில் செய்த செயலொன்றின் ஊழ்வினையால் ஏற்பட்டதென்று சிலப்பதிகாரம் பகர்கின்றது. முற்பிறப்பில் சங்கமன் என்பவன் தன் மனைவி நீலியோடு நகையை விற்பனை செய்ய வந்த போது அவனை ஒற்றன் என்று மன்னருக்குக் கூறி அவன் கொலை செய்யப்படுவதற்கே உடந்தையாய் இருந்தான். நீலி பதினான்கு தினங்கள் கழித்து மலை மீதேறி விழுந்த பொழுது "நான் பட்ட துன்பத்தை எனக்கு துன்பம் விளைவித்தோரும் படுக!" எனச் சபித்து இறந்தாள். இதனால்தான், கோவலன் கொலை செய்யப்பட்டான். கண்ணகி பதினான்கு நாட்களின் பின் அவனையடைந்தாள்.

கோவலன் கொலைக்களத்தில், தான் கள்வன் அல்ல என்று கூறவேயில்லை. கோவலன் தன்னைக் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது.

கொலைக்களத்தில் கோவலன் கொலையுண்டிருந்தபோது கற்புக்கரசியான கண்ணகி வந்து தழுவிய பொழுது அவன்

உயிர் பெற்றெழுந்து "பூரண சந்திரன் போன்ற ஒளியைக் கொண்ட நின் முகம் இப்படிக் கன்றிவிட்டதே" எனக் கூறி, அவள் கண்ணீரைத் துடைத்து "எழு தொழில் மலருண்கண் இருந்தைக்க..." எனக் கூறி விண்ணுலகு சென்றான் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

கோவலன் கொலையுண்ட பதினாலாம் நாள் மீண்டும் வந்த அவன் அவளையும் விண்ணுலகுக்கு அழைத்துச் சென்றான் என்று கோவலன் கதையைக் கூறி முடிக்கிறார் இளங்கோவடிகள்.

இந் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் ஊழ்வினையும் விதியுமென்றே சிலப்பதிகாரம் கூறுகின்றது. கோவலனுடைய செயல்களுக்கு அவனிடம் நிலையான கொள்கையோ, உறுதியான மன நிலையோ இருக்கவில்லை என்பதோடு அவனுடைய செல்வ நிலையும், கலை ஆர்வமும், அன்றைய சமுதாய நிலையுமே காரணமாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் காட்டிய பழி

இளங்கோ யாத்த சிலப்பதிகாரம் என்னும் நூலில் கலையரசியான மாதவியை, காப்பியத் தலைவனுன கோவலனைத் தவிர வேறு ஒருவருமே இகழ்ந்து பேசுவதாகக் காட்டப்படவில்லை. கோவலன் மாதவியைத் தூற்றி பேசியது உணர்ச்சி வசப்பட்டதாலேயே என்பது, அவன் பின்பு மதுரைக்குச் செல்லும் வழியில், மாதவியின் இரண்டாம் திருமுகத்தினை உணர்ந்த பின், அவளைப் பழித்துப் பேசியது பிழையென அறிந்து கொள்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தன் தீது இலளெனத் தளர்ச்சி நீங்கி
என் தீது என்றே எய்தியது உணர்ந்து

என்ற அடிகள் இதனைக் காட்டுகின்றன.

இந்திர விழா பூர்த்தியான மறுநாள், கோவலனும் மாதவியும் புகார் நகரத்துக் கடற்கரைக்குச் சென்றனர். அங்கு கோவலன் பாடிய கானல் வரிப் பாடல்களுக்கு எதிரான பாடல்களை மாதவி பாடினுள். மாதவியின் பாடல்களைத் தவருகப் புரிந்துக்கொண்ட கோவலன், ''நான் கானல் வரிப் பாடல்களை இசைத்தேன். வஞ்சனை கொண்டு பொய்மைகளைக் காட்டும் மாயத்தில் கைதேர்ந்தவளாகிய மாதவியோ, வேறென்றின் மீது மனம் வைத்துப் பாடிவிட்டாளே!'' என எண்ணுவதனை, சிலப்பதிகார ஆசான்,

கானல் வரியான் பாட தான் ஒன்றின்மேல் மனம்
வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்
பாடினுள்

எனச் சித்தரித்துள்ளார்.

கோவலனைப் பிரிந்த மாதவி திருமுகம் ஒன்றினை வரைந்து வசந்த மாலை என்பவளிடம் கொடுத்து அதனைத் தன் காதலனிடம் கொடுக்குமாறு தூதனுப்பினுள். கோவலனே அதனைப் பெற மறுத்து, ''மாதவி ஓர் ஆடல் மகள். என் மேல் விருப்பம் கொண்டவளைப் போல நடித்தது அவளுடைய தொழிலுக்கும் தகுதிக்கும் பொருந்தும்'' எனக் கடிந்துரைப்பதனைக் காப்பியப் புலவர்,

ஆடல் மகளே ஆதலின் ஆய் இழை
பாடு பெற்றன அப்பைந் தொடிதனக்கு

என இயம்புகிருர்.

மாதவியுடன் கருத்து வேறுபட்டு, அவள் அனுப்பிய திருமுகத்தினையும் பெற மறுத்துத் தன் மனைவியிடம் வந்த கோவலன், மனையாளுடைய வாடிய மேனியும் வருத்தமும் கண்டு, ''வஞ்சகம் கொண்டவளோடு கூடியிருந்ததனுல் நம் குலத்தவர் தந்த குன்று போன்ற செல்வமெல்லாம் தொலைந்ததே'' என்று அங்கலாய்த்துக் கொள்வதனை இளங்கோவடிகள்,

சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி
குலம் தரு வாள் பொருள் குன்றம் தொலைந்த......

எனக் காட்டுகின்ருர்.

மாதவியை இகழ்ந்து கூறும் இம் மூன்று வேளைகளிலும் கோவலன், உண்மையான அன்பு இல்லாத மாதவி, கபடமாகத் தன்னை ஏமாற்றினுள்' என நினைத்துத் தூற்றுகிருன். மாதவியின் முன்னிலையில், நேருக்கு நேராக இத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக் கூறப் போதிய மன வலிமையும், துணிவும் கோவலனிடம் இருக்கவில்லை.

முதலில் கானல் வரிப் பாடல்களை இசைத்த பின் மாதவியைப் பற்றிய இகழ்ச்சியான எண்ணத்தை மனதில் நினைத்தானேயொழிய ஒன்றையுமே வாய்திறந்து கூற வில்லை.

மாதவியைப் பிரிந்து தன் வீடு திரும்பும் வழியில் வசந்தமாலை என்பவள், மாதவி கொடுத்தனுப்பிய திருமுகத்தினைக் கொண்டு வந்த போது, கோவலன் கட்டு மீறிக் கொண்டிருக்கும் தன் உள்ளக் குமுறலை வெளியிடுகிறான்.

பின் வீடு வந்து சேர்ந்தபின் தன் மனையாளுடைய 'வாடிய மேனி வருத்தம்' கண்டு, தன் செல்வமெல்லாம் தொலைந்ததற்கு மாதவியே காரணம் எனக் கூறி இகழ்கிறான்.

மாதவியைப் பழித்துக் காட்டுஞ் செயல் ஒரே நிகழ்ச்சித் தொடராக அமைந்துள்ளது. சந்தர்ப்ப வசத்தால் உணர்ச்சி வசப்பட்டு மாதவியை இகழ்ந்து, பழிச் சொல் கூறிய கோவலன், கண்ணகியைக் கவுந்தியடிகளின் துணையுடன் மதுரைக்கு அழைத்துச் செல்லும் பொழுது தன் தவறை உணர்ந்து வருந்துகிறான்.

எனவே சிலப்பதிகார மாந்தருள், மாதவி மேல் பழி சுமத்திய குறையைக் கொண்டவன் அக் காப்பியத் தலைவனான கோவலன் ஒருவனே.

சிலப்பதிகாரம் காட்டும் நுதல் விழி நாட்டத்து இறையோன்

புராதனமான வழிபாடுகளில் ஒன்று என ஆராய்ச்சியாளர்களால் கருதப்படும் சிவ வழிபாட்டினைப் பற்றிய குறிப்புக்களை இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே காட்டியுள்ளார். சங்க இலக்கியங்களும், வைதிக இலக்கியங்களும் சிவ வணக்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தம்மகத்தே கொண்டுள்ளன.

சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்டுவந்த நாட்களில், வழிபாடு நடைபெற்ற கோயில்களுள், சிவன்கோயில், முருகன் கோயில், திருமால் கோயில், இந்திரன் கோயில் என்பவை முக்கியமானவை. இதனைப்பற்றிக் கூறும் இளங்கோ, பிறவாயாக்கைப் பெரியோனான சிவனுடைய கோயிலை ஆரம்பத்திலேயே கூறி, அதன்பின் மற்றைய கோயில்களைக் குறிப்பிடுகின்றார்.

பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளைமேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்.

(5: 169-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி நாட்டின் தலைநகராக விளங்கிய மதுரைமா நகரில், வழிபாடு நடைபெற்ற கோயில்களைப் பற்றிக் கூறவந்த இளங்கோ, நுதல்விழி நாட்டத்து இறையோனாகிய சிவனுடைய கோயிலை முதற்கண் கூறிப் பின்னர் மற்றைய கோயில்களைக் குறிப்பிடுகின்றார். இதனைப் பின் வருமாறு காட்டுகின்றது சிலப்பதிகாரம்:

நுதல்விழிநாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும்.

(14: 7-10)

சிவனுக்கு உரியவளாகப் போற்றப்படும் கொற்றவை. சிவன் செய்த செயல்களையும், சக்தி புரிந்ததாகக் கூறப்படும் செயல்களையும், ஒருங்கே பூண்டவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது நோக்கற்பாலது: பிறை சூடிய சென்னியாள், நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்துப் பார்த்த இமையாத கண்ணினாள், நஞ்சினை உண்ட கருநீலக் கழுத்தினள், வெஞ்சினத்துப் பாம்பினை நாணாகப் பூட்டி மேருமலையை வளைத்தவள். யானைத்தோலைத் தரித்தவள். சூலம் ஏந்திய என்று சிவபெருமானுக்கு எனக் கூறப்பட்டுள்ள குணங்களும், பவள வாயினள், முத்தொளி விளங்கும் புன் சிரிப்பை உதிர்ப்பவள், நச்சரவினைக் கச்சாகக் கட்டியிருக்கும் முலையினள், மகிஷாசுரனை வென்று அவன் தலைமேல் நிற்பவள், என்றுமே இளமை குன்றாதவள், திருமாலின் தங்கையாக விளங்குபவள் என்று அம்பிகைக்குக் கூறப்பட்டுள்ள குணங்களும் மதுரைக் காண்டத்து வேட்டுவ வரியில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி, தவள வாள் நகைச்சி

நஞ்சு உண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சு உடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி கரியின் உரிவை
போர்த்து, அணங்கு ஆகிய அரியின் உரிவை பேசலை
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி [யாட்டி
வலம்படு கொற்றத்து வாய் வாட் கொற்றவை.

(12: 54-64)

செஞ்சடை வானனாகிய சிவபெருமானுடைய அருளினால் வஞ்சிமா நகரில் இளங்கோவடிகளின் தமையனாக சேரன் செங்குட்டுவன் தோன்றினான் என்றதொரு குறிப்பைச் சிலப்பதிகாரம் பின் வருமாறு காட்டுகின்றது.

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ!"

(26: 98-99)

எவருக்குமே தலைவணங்காத சேரன் செங்குட்டுவன் சிவபெருமானுடைய சேவடிகளைத் தாங்க தலை தாழ்த்தி, பிறைச் சந்திரனைத் தரித்த நீண்ட சடாமுடியைக் கொண்ட சிவபெருமானுக்குச் சமர்ப்பித்த மலர்களில் சிலவற்றைத் தன் மணிமுடியிலே தரித்துக் கொண்டான். இதனை

"நிலவு கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு"

எனக்காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானுடைய செவ்வையான பாதாரவிந்தங்களிலிருந்து மலர்களில் சிலவற்றைத் தன் மணி முடி மேல் சூடியிருந்ததால், திருமால் கோயிலின் சேடத்தைத் தன் தோளில் வைத்து வழிபட்டான் என மொழிகின்றார் இளங்கோவடிகள்.

ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த சஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத் தாங்கினன்
ஆதித் தகைமையின் செல்லுழி
(26: 62–67)

சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்து, காடுகாண் காதையில் மாங்காட்டு மறையோன் ஒருவனிடம் கோவலன், ''மதுரைக்குச் செல்லும் வழி யாது?'' எனக் கேட்க, அம் மறையோன், ''சிவபெருமானுடைய சூலத்தைப் போன்று மூன்று வழிகள் பிரியும். அதில் நடுவழியாகச் சென்றால், மதுரை மா நகரை அடையலாம்'' என்று கூறுகிறான். இறையுணர்வு அன்றைய மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள நிலையினை இச் சம்பவம் தெளிவாகக் காட்டுகின்றது. இதனைப் பின் காணுமாறு எடுத்துக் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறை வாய்ச் சூலத்து அருநெறி கவாக்கும்
(11: 72-73)

உமையவளை, இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் பைரவி அரங்கமெனப்படும் சுடுகாட்டில் தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, முப்புரங்களையும் ஒரு

புன்சிரிப்பாலேயே எரித்த பின், கொடுகொட்டி என்னுந் தாண்டவத்தை ஆடியதனை, இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் பின் வருமாறு இயம்புகின்றார்.

பாரதி ஆடிய பாரதி அரங்கத்து திரிபுரம் எரியத்
தேவர் வேண்ட
எரிமுகப் பேர் அம்பு ஏவல் கேட்ப உமையவள் ஒரு
திறன் ஆக ஓங்கிய
இமையவள் ஆடிய கொடுகொட்டி ஆடலும்
(6: 39-43)

இதனையே வஞ்சிக் காண்டத்து நடுநற்காதையில்
உமையவள் ஒரு திறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
(28: 74-75)

எனக் கூறுகின்றார்.

கல்லால மரத்தினடியில், தென் திசையை நோக்கியவாறு 'சின் முத்திரை' காட்டிவாறு யோக நிலையில் இருக்கும் சிவபெருமானுடைய செல்வனைப் பற்றி பின் வருமாறு மொழிகின்றார் இளங்கோ.

மறைமுது முதல்வன் பின்னர் மேய (12:23)
ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன் (23:91)
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின் (24:13)
ஆலமர் செல்வன் புதல்வன் வரும். (24:15)

சிவபெருமானின் ஓர் அம்சமான அர்த்த நாரீஸ்வர மூர்த்தத்தில் சக்தியானவள் இறைவனின் இடப்பாகத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால், 'மாதொரு பாகன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிறப்பான பெயர் கொண்டுள்ளான். மாதொரு பாகனின் அம்சத்தை இளங்கோ கீழ்க்காணுமாறு இயம்புகிறார்.

..................கண்ணுதல்
பாகம் ஆளுடையாள் பலிமுன்றிலே (12:1)

கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய் (12:9)

உமையொரு பாகத்து ஒருவனை வணங்கி அமர்க்களம்
(28:103)

பழைமையான குடியிலே பிறந்த வாலைக் குமரியாகிய பார்வதிதேவியை பிறைசூடிய எம்பெருமான் கையேற்ற சம்பவத்தினைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு பகருகின்றது.

முது குடிப்பிறந்த முதிராச் செல்வியை
மதி முடிக்கு அளித்த மகட்பாற் காஞ்சியும்
(25:133-134)

சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமான கண்ணகிக்குப் படிமம் செய்து பிரதிஷ்டை செய்யமுன் சிவபெருமானை வழிபட்டான் என்பதனை இளங்கோ கீழ் வருமாறு உரைக்கின்றார்.

இமையவர் உறையும் இமையச் செல்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரிசிக்க.
(28: 226-227)

சிலப்பதிகாரம் காட்டும் முருகப் பெருமான்

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத் தெய்வமெனப் போற்றப்படுபவன், முருகப் பெருமான். இதனைத் தமிழ் மொழியின் மிகத்தொன்மையான நூலெனப் போற்றப்படும் தொல்காப்பியம், "சேயோன் மேய மைவரை யுலகமும் (தொல்: பொருள் 5) எனக் குறிப்பிடுகின்றது.

சிலப்பதிகாரத்தில் முருகப்பெருமானைப் பல நிலைகளிலும், அவர் செய்ததாகக் கூறப்படுகின்ற செயல்களையெல்லாம் தொடர்பு படுத்தி இளங்கோவடிகள் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

பதினாறுண்டுப் பருவம் எய்திய காப்பியத் தலைவனை கோவலனைப் பற்றிக் குறிப்பிடுகையில் இளங்கோ, முருகனைக் கோவலன் வடிவில் கண்டு சித்திரிக்கின்றார்.

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார் தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டி
கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசைபோக்கி-
காதலால்
கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன் என்பான்
(மங்கல வாழ்த்து)

கோவலன் கண்ணகியுடன் இல்வாழ்க்கை நடாத்திய போது ஒரு நாள் அவளுடைய கண்களை, முருகனது வேலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கூருக்கியதைப் போன்றிருந்தது எனக் கூறுவதாக மொழிகின்றுர் இளங்கோவடிகள்.

அறுமுக ஒருவன் ஓர் பெறு முறை இன்றியும்
இறுமுறை காணும் இயல்பினின் அன்றே
அம்சுடர் நெடுவேல் ஒன்றும் நின் முகத்துச்
செங்கடை மழைக் கண் இரண்டா ஈத்தது

(மணையறம்)

இந்திர விழா நடந்த பொழுது காவிரிப்பூம்பட்டினத்தில் முருகப் பெருமானுக்குத் தனிக்கோயில் இருந்ததென்பதை,

அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்

(இந்திரவிழா)

எனவும், மதுரை மாநகரிலும் அவ்வாறே முருகப் பெருமானுக்குத் தனிக் கோயில் இருந்ததென்பதனை,

கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்

(ஊர் காண்)

எனவும் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

வலிமை பொருந்திய சூரபன்மன் என்ற அசுரனைப் போர் செய்து வெற்றிவாகை சூடிய சம்பவத்தினை,

நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன் நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்
படை வீழ்த்து அவுணர் பையுள் எய்த
குடை வீழ்த்து அவர்முன் ஆடிய குடையும்

(கடல்ஆடு)

எனவும்,

சிலப்பதிகாரம் காட்டும் முருகப் பெருமான்

உரவு நீர் மாகொன்ற வேல் ஏந்தி ஏத்திக்...

எனவும் (குன்றக்குரவை)

பாரிடும் பௌவத்தினுள் புக்குப்
பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

(குன்றக்குரவை)

எனவும் கூறுகின்றுர் இளங்கோ.

ஆறுமுகங்களைக் கொண்ட கோலத்தில் முருகன் மயிலின்மீது சென்று அவுணரை அழித்த நிகழ்ச்சியினை,

அணி முகங்கள் ஓர் ஆறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணி முக மேற் கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்
மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

(குன்றக் குரவை)

எனவும், முருகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்த வரலாற்றை,

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே

(குன்றக் குரவை)

எனவும், இன்ஞெரு சந்தர்ப்பத்தில்,

குருகு பெயர்க் குன்றம் கொன்ருன் மடவன்

(குன்றக் குரவை)

எனவும், பிறிதோர் இடத்தில்,

கடல் வயிறு கிழித்து, மலைநெஞ்சு பிளந்து ஆங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்

(கட்டுரை)

எனவும் காட்டுகின்றது, சிலப்பதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணப் பொய்கையில் முருகன் தாமரை மலர்களில் ஆறு பாலகர்களாகத் துயில் கொண்டும், கார்த்திகைப் பெண்கள் அறுவரின் திருமுலைப் பாலினை அருந்தி வளர்ந்த சம்பவத்தினை,

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப் பால் உண்டான் திருக்கை வேலன்றே
(குன்றக் குரவை)

முருகன் சிவபெருமானுடைய மைந்தனாக அவதரித்த வரலாற்றினை,

ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்
(குன்றக் குரவை)

எனவும்

ஆலமர் செல்வன் புதல்வன் வரும் ... (குன்றக் குரவை)

எனவும்,

கயிலைநன் மலையிறை மகனை... (குன்றக் குரவை)
எனவும் காட்டுகின்றது, சிலப்பதிகாரம்.

மலைமகளின் மகனாக முருகப்பெருமான் அவதரித்த தனை,

மலைமகள் மகனை நின் மதி நுதல் (குன்றக் குரவை)

எனவும், மலையவர் மகளான வள்ளியை, முருகன் மனையாட்டியாளாகக் கொண்டதனை,

மயிலியல் மடவரல் மலையர் தம் மகளார்
(குன்றக் குரவை)

எனவும்,

சிலப்பதிகாரம் காட்டும் முருகப் பெருமான்

குலமலை உறைதரு குறவர் தம் மகளார்
(குன்றக் குரவை)

எனவும்,

குறமகள் அவள் எம் குலமகள் (குன்றக் குரவை)
எனவும் காட்டுகிறது சிலப்பதிகாரம்.

முருகப் பெருமான் மயிலின் மீது தன் உள்ளங்கவர்ந்த வளுடன் உலாவிவருவதனை,

நீலப்பறவைமேல் நேரிழை தன்னோடும்
(குன்றக் குரவை)

எனவும், கார் காலத்திலே மலரும் கடப்பமாலையைத் தன் கழுத்தில் முருகப்பெருமான் அணிந்திருப்பதை,

கார்க் கடப்பந்தார் எம் கடவுள் (குன்றக் குரவை)

எனவும் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

முருகப் பெருமானுடைய விசேட சான்னித்தியம் பெற்ற இடங்களில் திருச்செந்தூர், திருச்செங்கோடு, சுவாமிமலை, திருவேரகம் போன்ற திருப்பதிகளைப் பற்றிய குறிப்புக்களும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன.

சீர்கெழு செந்திலும், செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே
(குன்றக் குரவை)

கண்ணகி மதுரை மாநகரை எரித்தபின் அந்நகரை விட்டுச் சென்று முருகப் பெருமானுக்கு உரியது எனப் போற்றப்படுகின்ற திருச்செங்குன்றின் மீது ஏறினாள் என்று காட்டுகின்றது சிலப்பதிகாரம். இத் திருச்செங்குன்றம் என்னும் குன்றம், திருச்செங்கோடு என்றும் திருச்செங்குன்று எனவும் கூறப்படுகின்றது.

நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி (கட்டுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் காட்டும் சூரிய வழிபாடு

உலகினுக்குச் சக்தியை அள்ளி அள்ளிக்கொடுக்கும் கண்கண்ட தெய்வமாகச் சூரியனைப் போற்றி வழிபாடுகள் நடாத்தினர் பண்டையத் தமிழ் மக்கள்.

உலகினுக்கே கண்ணாக விளங்கும் சூரியனை, முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபடும் முறைகளைக் கொண்டுள்ள சமயம் சௌரம் எனப் பெயர் பெற்றது.

வேதங்கள், இதிகாச புராணங்கள் போன்றவை சூரியனுடைய வரலாற்றினைப் பற்றிய பல தரப்பட்ட செய்திகளைக் கொண்டுள்ளன.

கதிரவனை நடுநாயகமாக வைத்துக் கணிக்கும் கணித முறையைச் சூரியசித்தாந்தம் என்று கூறுவர். சோதிட நூல்கள் சூரிய மண்டலத்தை அடிப்படையாகக் கொண்டவை.

சிலப்பதிகாரத்தின் ஆரம்பத்திலேயே இளங்கோவடிகள் சூரிய சந்திரரை வாழ்த்துகின்றார்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரி போல், பொன் கோட்டு
மேரு வலந் திரிதலான்

(சிலப்:-மங்கல வாழ்த்து)

"ஞாயிறைப் போற்றுவோம்! காவிரிநாடனின் ஆக்ஞாசக்கரம் போன்ற அழகான மலைமுகடுகளைக் கொண்ட மேருமலையைச் சுற்றிவருவதால் ஞாயிறைவாழ்த்துவோம்!" என்று இளங்கோவடிகள் சூரியனை வாழ்த்துகின்றார்.

கற்புக்கரசியான கண்ணகி தன் கணவனாகிய கோவலன், பாண்டிய மன்னனின் மனைவியான கோப்பெருந்தேவியினுடைய சிலம்பொன்றைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலையுண்டதைக் கேள்விப்பட்டு, வருந்தி, கண்ணீரும் கம்பலையுமாக, எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கும் கதிரவனை விளித்து, "காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" எனக் குமுறினாள். "கருங்கயல் போன்ற கண்களையுடைய மாதே! உன் கணவன் கள்வனல்லன். இவ்வூரைப் பெருந்தீ உண்ணப் போகின்றது" என்று ஆதவன் குரல் அசரீரியாக ஒலித்தது, என்பதனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு காட்டுகின்றார்,

காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ, என் கணவன்?
கள்வனோ அல்லன்: கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணும் இவ்வூர் என்றது, ஒரு குரல்

(சிலப்: துன்பமாலை)

என்றனன் வெய்யோன்... (சிலப்: ஊர்சூழ்வரி)

வெங்கதிரோனுடைய வெம்மை முழுவதும் உலகிற்கு வராமல் வாலகில்யர் என்ற முனிவர் கதிரவனுடைய கதிற்கற்றை வடிகட்டி உலகம் தாங்கிக் கொள்ளும் அளவுக்கே அனுப்புவதாகக் கூறப்படுவதை

சுடரொடு திரி திருத
முனிவரும் அமரரும்.

(சிலப்: வேட்டுவவரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

சோழ நாட்டில் காவரிப்பூம்பட்டினத்தில் சூரிய னுக்கெனத் தனிக்கோயில் இருந்ததென்பதை இளங்கோ வடிகள் பின்வருமாறு காட்டுகிறார்.

......................,பகல் வாயில்
உச்சிக்கிழான் கோட்டம்...

(சிலப்: கனுத்திறம்

'நேரம் புலர்கின்ற வைகறை வேளையிலே பொய் கையிலுள்ள தாமரை மலரினைப் பொதியவிழித்து, இதழ் விரித்து மலரச்செய்தனன் என்பதைப் போன்ற இயற்கை வர்ணனைகளைச் சூரியனுடன் சம்பந்தப்படுத்திக் காட்டுகின் றார் இளங்கோவடிகள்.

புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி அவிழ்த்த உலகுதொழு மண்டிலம்

(சிலப்: ஊர்காண்காதை)

இரட்டைக் காப்பியங்கள் கூறும் இந்திர விழா

ஐம்பெருங் காப்பியங்களுள் இரட்டைக் காப்பியங் கள் எனக் கூறப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை என் னும் இலக்கிய நூல்களில் பல்வேறு வகையான விழாக் களைப் பற்றிய விவரங்கள் கூறப்பட்டிருந்த போதிலும், இந்திரவிழாவைப் பற்றி விரிவான விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச் சியான கதைப்போக்கினைக் கொண்டது.

சிலப்பதிகாரம், இந்திரவிழாவினைக் காவிரிப்பூம் பட் டினத்து மக்கள் கொண்டாடும் முறைகளையும் அப்போது அங்கு வாழ்ந்த குடிகளைப்பற்றியும் அன்றைய நகரத்து அமைப்பு பற்றிய விபரங்களையும் கூற, மணிமேகலை இவ் விழா தோன்றிய வரலாறு, விழாவினை நகருக்கு அறிவிக் கும் முறைமை, விழாவின்போது அலங்கரிக்கப்பட்ட வீதி களின் காட்சி, ஆகியவற்றையெல்லாம் விளக்கமாகக் கூறு கின்றது. அத்துடன் இந்திரவிழா பற்றிய சில பொது வான அம்சங்களை இவ்விரு தொடர் காப்பியங்களி லும் காணலாம்.

சோழ நாட்டில், காவிரியாறு கடலோடு கலக்கும் கழிமுகத்தில், கடல் வணிகத்தில் காவிரிப்பூம் பட்டினம் மேன்மையுற்று விளங்கியது. இதனை மூதூர், பேரூர், பெருநகர், புகார், பூம்புகார், காவிரிப்பட்டினம், காவி ரிப் படப்பைப் பட்டினம், காவிரிப் படப்பை நன்னகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் அழைத்தனர். காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட சோழ நாட்டின் புகழை மேம்படுத்த ஆகாயத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்த கொடிய அசுரர்களின் மதில்களை அழித்த, வீரவளையினை அணிந்த சோழ மன்னன், விண்ணவர் தலைவனை வணங்கி "காவிரிப்பூம் பட்டினத்தில் மேலோரும் விழையும் வண்ணம், இருபத்தியெட்டுத் தினங்களுக்கு ஒரு விழாவினைக் கொண்டாடப் போகிறேன். அதில் தாங்களும், நாலேழ் நாளிலும் வந்திருந்து இனிது நிறைவேற அருள் புரிய வேண்டும்" என வேண்டிக்கொண்டான்.

'மருத நிலத்தின் தெய்வமெனவும், மேகங்களின் அதிபதியெனவும் போற்றப்படும் இந்திரனை வழிபட்டால் நாட்டில் மழைவளம் பெருகிப் பசி, பிணி இன்றி நாடு செழிப்புற்றிருக்கும்' என்ற நம்பிக்கை இருந்ததால், 'தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் ஆண்டு தோறும் கொண்டாடி வந்த இந்திரவிழாவினை, அவன் வழிவந்த மன்னர்களும் சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள்.

இந்திர விழாவானது ஆண்டு தோறும் பூம்புகாரில், சித்திரை மாதத்துச் சித்திரா பூரணையன்று ஆரம்பமாகி, இருபத்தியெட்டுத் தினங்கள் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டபின், காவிரியாறு கடலொடு கலக்கும் கழிமுகத்தில், நகரமக்கள் நீராடி, ஆடியும் பாடியும் இன்புறுவதோடு இனிது முடிவுறும்.

இந்திரவிழாவின்போது தேவர் தலைவனும் மற்றையத் தலைவர்களும் தத்துவப் பொருளுரைப்போர், சமயக் குரவர்கள், அறிஞர்கள், ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தினர் போன்றோர் குழுமியிருந்து விழாவினைச் சிறப்பிப்பார்கள்.

இந்திரவிழாவினைக் கொண்டாடாதுவிடின் தேவர் நகரமாகிய அமராபதியில் கொடியெடுத்த தேர்ப்படை

யினையுடைய முசுகுந்த மன்னனின் துயரைப் போக்கிய நாளங்காடிப் பூதம் இடுக்கண் விளைவிக்கும், பாவிகளைமாத்திரமே கொன்று தின்னும் சதுக்கப் பூதம் இந்நகரை விட்டுப் போய்விடும் என்ற நம்பிக்கைகளினால் இந்திர விழா இடையூறின்றி நடைபெற்று வந்தது.

செல்வம் கொழிக்கும் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு முறை நெடுமுடிக் கிள்ளி என்ற மன்னன் தன் காதலியைத் தேடிச்சென்று இந்திரவிழாவினைக் கொண்டாடாமல் தவறவிட்டுவிட்டதால் மணிமேகலா தெய்வத்தின் ஆணைப்படி பூம்புகார் கடல்கோளுக்கு இரையாகி அழிந்தொழிந்ததாம்.

பூம்புகாரின் மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என்று வழங்கப்பட்ட இரு பாக்கங்களுக்கும் இடையில் அமைந்திருந்த நாளங்காடி (பகற்கடைத்தெரு) என்னும் இடத்தில் உள்ள நாளங்காடிப் பூதத்தினை, இந்திர விழா தொடங்கு முன்பாக அழகிய மறக்குடிப் பெண்டிர் வழிபடுவர். இவர்கள் காவற் பூதத்துக் கோயிலின் பலி பீடிகையில் புழுங்கல், எள்ளுருண்டை, நிணச்சோறு, மலர்கள், நறுமணங்கமழும் புகை, பொங்கல் ஆகியவற்றையெல்லாம் படைத்துத் துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து போன்ற கூத்து வகைகளையாடி,

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்க

(சிலப்பதிகாரம்: இந்திரவிழா–489-490)
(மணிமேகலை: விழாவறை -70–71)

என வாழ்த்துவார்கள்.

இதன்பின் மருவூர்ப்பாக்கத்து வீரமறவர்கள் பட்டினப்பாக்கத்துப் படைவீரர்களும் ஒருங்கு சேர்ந்து "எங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய மன்னருக்கு நேருகின்ற துன்பங்களை ஒழிப்பா யாக'' என வேண்டுவர். உயிர் பலியுண்ணும் பூதத்திற்காகச் சில வீரர்கள் தங்கள் தலையையே கொய்து விடுவார்கள். நாட்டின் செங்கோன்மை தவருது நடக்க வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கால் மன்றம், பூதசதுக்க மன்றம், பாவை மன்றம் ஆகிய ஐவகை மன்றங்களிலும் பலிகொடுத்தார்கள். இன்னும், முத்துப் பந்தர் பட்டி மண்டபம், தோரண வாயில், ஆகியவற்றைக் கொண்ட மண்டபங்களிலும் பலிகொடுத்தார்கள்.

இதன் பின் முதுகுடிப்பிறந்த முரசு அறைவோன், இந்திரனுக்குரிய வச்சிரக் கோட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் வீரவிழா முரசினை, நன்கு அலங்கரிக்கப்பட்ட யானையின் பிடரியில் ஏற்றி இந்திர விழாவைப் பற்றிய விபரங்களையெல்லாம் நகர மக்களுக்கு அறிவித்தபடியே வீதிகளை வலம் வருவான். அவ்வாறுவருங்கால்''இம்மாநகர் வாழ்க! வானம் மும்மாரி மழை பொழிக! அரசன் செங்கோல் செலுத்துவானுக! இந்திரவிழாவின்போது இந்திரனும், மற்றைய தேவர்களும் பதினெண் கணங்களும் இந்நகரில் தங்குவர் ஆகையால் நீங்கள் எல்லோரும் ஒருங்கு கூடி நகரை நன்ருக அழகு படுத்துங்கள். வீதிகளில் உள்ள பழைய மணலை அகற்றிப் புது மணலைப் பரப்புங்கள்! குலைகளோடு கூடிய கமுகு, வாழை போன்ற மரங்களையும் வாஞ்சிபோன்ற பூங்கொடிகளையும், கரும்பு, மாவிலை, தென்னங் குருத்து போன்றவைகளினுல், தோரணம் கொடி முதலியவற்ருல் நகரின் அழகுக்கு அழ கூட்டுங்கள்! கோயில்களில் எல்லாம் வழிபாடுகள் செய்யுங்கள்! பந்தர்கள், அம்பலங்கள் போன்ற இடங்களில் அறவுரை நடாத்துங்கள்! பட்டி மன்றத்தில் விவாதங்களை நடாத்துங்கள்! பகைவரோடாயினும் சினம் கொள்ளா திருங்கள்!' என அறிவித்து '' பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்க'' என வாழ்த்தி இந்திர

விழாவினைப் பற்றிய செய்தியை எல்லோருக்கும் அறிவிப்பான். இதனைச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், பின் வருமாறு காட்டுகின்றன.

> வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்
> கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி

(சிலப்பதிகாரம்:- இந்திரவிழா: 558-559)
(மணிமேகலை:- விழாவறை: 27-28)

இந்திரவிழாவில் இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் எழுதப்பட்ட கொடியினைக் கொடிக்கம்பத்தில் ஏற்றி வானளாவப் பறக்குமாறு உயர்த்துவதுடன் விழா ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து, மரகத மணியுடன் வயிர முத்துஞ் சேர்ந்து இழைத்த கால்களையும், பசும் பொன்னுலான மேற் கூரையையும் கொண்ட பல்லக்கிலே இந்திரன் திருவுருவத்தினை எழுந்தருளச் செய்து, வீதியை வலம் வரச் செய்வர். வீதிகளில் நெடு நிலை மாளிகைகளின் வாயில்களில் கிம்புரி, முத்து ஆகியவற்ருல் அலங்கரிக்கப்பட்ட மகர தோரணங்கள் காட்சியளித்தன. இங்கு பசும்பொற் பூரண கும்பங்களும், பொலிவான முளைப் பாலிகைகளும். பசும் பொன்னுலான கொடி, வெண்சாமரை போன்றவற்றையெல்லாம் வைத்து இந்திரனின் திருவுலாக் காட்சியைச் சிறப்பித்தனர்.

ஐம்பெருங் குழுவினரும், எண்பேர் ஆயத்தினரும், அரச குமாரர்கள், பரத குமாரர்கள் புரவியர், யானையின் தொகுதினர், குதிரைகள் பூட்டிய தேரைக் கொண்டவர்கள் எல்லோரும் திரண்டு வந்து, ''உரைசால் மன்னன் கொற்றம் கொள்க!'' என வாழ்த்தி நின்றனர்.

காவிரி நதியின் சங்கமத்துறையிலே புண்ணிய நன்னீரினைப் பொற்குடங்களிலே நிரப்பி விண்ணவர் தலைவனும் இந்திரன் திருவுருவினுக்கு குடமுழுக்காட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரவிழா நடைபெற்ற காலையில் நகரில் உள்ள கோயில்களில் எல்லாம் விசேட பூஜைகளும் யாகங்களும் சிறப்புற நடைபெற்றன. அறச்சாலைகளிலெல்லாம் அற நெறிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அரங்குகள் சிலவற்றில் கூத்தரின் நாட்டிய நிகழ்ச்சிகளும், இன்னுஞ் சில அரங்குகளில் நாடகங்களும் இரவும் பகலும் இடம் பெற்றன.

நறுமண மலர்களின் சுகந்த தென்றலாகிய மாருதம் இனிய இளவேனிற் பருவத்துடன் புகார் நகரை எழிலுடன் மிளிரச் செய்தது.

இருபத்தியெட்டுத் தினங்கள் இந்திர விழாவைக் கொண்டாடிய பின், ஐராதவதக் கொடியை இந்திரனுடைய கோட்டத்துக் கொடிமரத்திலிருந்து இறக்கிய மறு நாள் நகரத்து மக்கள் புகார்ப்பட்டினத்துக் கடற்கரையில் ஒருங்குகூடி இன்னிசை, நாடகம், நாட்டியம் பல் வேறு கேளிக்கைகள் நடாத்திக் கடலில் குளித்து ஆடிப் பாடி இன்புறுவார்கள். இவ்வைபவத்திற்கு அரசனும், அவனுடைய உரிமைச் சுற்றத்தாரும் சமூகமளித்து விழாவினைச் சிறப்பித்து இனிது முடித்து வைப்பார்கள்.

சிலப்பதிகாரம் காட்டும் புராண இதிகாசங்கள்

சிலப்பதிகாரத்தில் ஏராளமான புராணக் கதைகளும் இதிகாச சம்பவங்களும் பரவலாக எடுத்தாளப் பட்டிருப்பதைக் காணலாம். நம் முன்னோர்கள் வாழ்க்கையின் தத்துவங்களை விளக்கப் பல வழிவகைகளை வகுத்துக் காட்டியுள்ளனர். வேதங்கள் கூறும் வழிமுறைகளை எல்லோரும் விளங்கும் வகையில் உண்மைகளை விளக்கி அவற்றுக்கு உதாரணங்களாகக் கடவுளைச் சம்பந்தப்படுத்தி, இறைவனையடைவதையே கதையின் மூலக்கருவாக வைத்து அமைக்கப்பட்டவையே புராணங்கள். புராணம் என்ற சொல்லுக்குப் பழமையான தெய்வீகக் கதை என்று பொருள் கூறலாம். இவைதவிர, அரசர்களைப் பற்றியும் இறைவனின் திருஅவதாரங்களைப் பற்றியும் கூறும் இராமாயணம், மகாபாரதம் போன்றவை இதிகாசங்களெனப்படுவன.

சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே காணப்படும் புராண இதிகாசங்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

தேவர்களும், அசுரர்களும் முன்பொரு தடவை யுத்தம் புரிந்தனர். ஒவ்வொருவர் பக்கத்திலும் எண்ணிறந்தோர் அழிந்தனர். இதனால் இருதிறத்தாரும் ஒரு சமரசத்திற்கு வரும் பொருட்டு திருமாலிடஞ்சென்று முறையிட்டனர். அதற்கு அவர் அமிர்தம் உண்டால் நெடுங்காலம் போர் புரியலாம் என்றார். அதற்கிணங்க மந்தரமலையை மத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், சந்திரனை அடைதூணாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு அசுரர் ஒரு பக்கத்திலும், தேவர் எதிர்ப்புறத்திலும் நின்று திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது திருமால் ஆமை ரூபமாகி மந்தரமலை நிலை ததும்பாமல் இருக்கும் பொருட்டுத் தாங்கியிருந்த புராண வரலாற்றினை.

பாம்பு கயிறுகக் கடல் கடைந்தமாயவன்

எனவும்,

முடியுடைக் கருந்தலை முந்துற ஏந்திக்
கடல் வயிறு கலக்கிய ஞாட்பும்

என்றும்

வடவரையை மத்தாகி வாசுகியை நாணுக்கி – கடல்
வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே

என்றும் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

ஆதிசேடன் என்னும் சர்ப்பத்தின் பாயலிலே பள்ளி கொண்டு, திருமகள் அமர்ந்த மார்பனாகத் திருமால் காட்சியளித்த கதையை

ஆயிரம் விரித்து எழுதலை உடை அருந்திறல்
பாயற் பள்ளி, பலர் தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்

எனச் சிலப்பதிகாரம் இயம்புகின்றது.

கதிரவனைத் தன் கையிலிருந்த சக்கராயுதத்தால் திருமால் மறைத்த கதையினை

கதிர் திகிரி யான் மறைத்த கடல் வண்ணன்

எனவும், மகாபலிச் சக்கரவர்த்தியைக் கொல்வதற்காக வாமன வடிவாகச் சென்ற திருமால், மூவடி மண் யாசித்துப் பின் விக்கிரமான வடிவமெடுத்து ஈரடியால்

உலகனைத்தையும் அளந்த புராணசம்பவத்தினை

நீள் நிலம் அளந்தோன் ஆடிய குடமும்...

எனவும்,

நீள் நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்...

எனவும்,

வையம் அளந்தான் தன் மார்பில் திருநோக்காப்...

எனவும்

இரண்டடியான் மூவுலகும் இருள் தீர நடந்தனையே...

எனவும்,

மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்ப...

எனவும் காட்டுகிறது சிலப்பதிகாரம்.

ஆயர்பாடியிலே யசோதையின் மைந்தனாக நீலவண்ணக் கண்ணன் அவதரித்த வரலாற்றினை

ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன்

எனவும், உறியில் மூடித் தொங்க வைக்கப்பட்டிருந்த பானையில் இருந்த வெண்ணெயைக் கள்ளத்தனமாக எடுத்துண்ட சம்பவத்தினை,

களவினுல் உறிவெண்ணெய் உண்டவாய்

எனவும்

பசி ஒன்றும் இல்லாமலேயே உலகம் அனைத்தையும் கண்ணன் உண்டான் என்ற புராண சம்பவத்தினை,

உறுபசி ஒன்றின்றியே உலகு அடைய உண்டனையே...

எனவும்

யசோதைப் பிராட்டியின் கடைகயிற்றால், கண்ணனின் குறும்பு செய்யும் கைகள் கட்டுண்ட வரலாற்றினை

அசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை...

எனவும், ஆயர்பாடியிலே கண்ணன் தன் தமையனை பலராமனோடு விளையாடிய வாலசரிதை நாடகங்களிலே பிஞ்ஞைப் பிராட்டியோடு கூத்தாடிய சம்பவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம் முன் ஆடிய
வால சரிதை நாடகங்களில்
வேல் நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய

எனவும்,

கண்ணன் குளக்கரையில் இளம் பாவையரின் புடவைகளே அவர்கள் குளத்தில் நீராடிக் கொண்டிருக்கும் போது எடுத்துச் சென்று ஒளித்து வைத்த சம்பவத்தினே,

இறு மென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவென்கோ யாம்
அறுவை ஒளித்தான் அயர அயரும்
நறுமென் சாயல் முகமென் கோ யாம்

எனவும், தீராத விளேயாட்டுப் பிள்ளேயாகக் கண்ணன் புல்லாங்குழல் ஊதித்திரிந்ததனே

...............அவன் வாயில்
முல்லேயம் தீங்குழல் கேளாமோ...

எனவும், கண்ணபிரான் பஞ்சபாண்டவர் சார்பில் துரியோதனனிடம் தூது சென்ற, பாரதக்கதையினே,

பஞ்சவர்க்குத் தூதாக நடந்த வடி...

எனவும்,

மடந்தாளும் நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானே நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்ற
படர்ந்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானே......

எனவும், பாரதப் போரிலே கண்ணபிரான் அருச்சுனனுக்குத் தேரோட்டியாக விருந்த சம்பவத்தினே.

............கடல் வண்ணன்
தேரூர் செருவும்............

எனவும், பாரதப் போரிலே சேர மன்னன் ஒருவன், போர் வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்துக் கௌரவித்த சம்பவத்தினே,

வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலன்''

எனவும்,

ஓர் ஐவர் ஈரையும் பதின்மர் உடன்றெழுந்த
போரிலே பெருஞ் சோறு போற்ருது தானளித்த
சேரன் பொறையன் மலேயன்

எனவும் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

இராமன் தன் தம்பியருள் ஒருவனுன இலக்குமணனேடு, தந்தையின் கட்டளேக்கிணங்க வனவாசஞ் செய்யச் சென்ற பொழுது, அங்கு சீதையைப் பறிகொடுத்த சம்பவத்தினே,

தாதை ஏவலின் மாதுடன் போகி
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்

எனவும்,

சேவடி சேப்பத் தம்பியொடும் கான் போந்தும்

எனவும்,

இராமன் இலங்கை வேந்தனுக விருந்த இராவணனேப் போரிலே வென்ற இராமாயணக் காட்சியினே

சோ அரணும் போர் மடியத்
தொல்லிலங்கைக் கட்டழிந்த

எனவும்,

............கடலகழ்
இலங்கையில் எழுந்த சமரமும்

எனவும் சித்தரிக்கின்றது, சிலப்பதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாட்டத்திலே தன் செல்வம், நாடாளும் உரிமை எல்லாவற்றையும் இழந்த நளன், தன் மனைவியான தமயந்தியுடன் கானகத்தை அடைந்து அங்கு விதி வசத்தால் காதலியைக் காரிருளில் கைவிட்டுச் சென்ற நளோபாக்கியானக் கதையை,

வல்லொடு ஆயத்து, மண், அரசு இழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்காள் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோன் அல்லன் காதலி
தீதொடு படூஉம் சிறுமையன் அல்லள்
அடவிக்கானகத்து ஆய் இழை தன்னை
இடை இருள் யாமத்து இட்டு நீங்கியது
வல் வினையன்றோ?

எனக் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

வேத முதல்வனை நான் முகனைத் திருமால் தோற்றுவித்த வரலாற்றினை,

வேத முதல்வற் பயந்தோன் என்பது .....
எனச் சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது.

பைரவி அரங்கமெனப்படும் சுடுகாட்டில் திரிபுரம் எரிய வேண்டும் எனத் தேவர்கள் வேண்ட, இறைவன் திரிபுரங்களை ஒரு புன் சிரிப்பால் எரித்ததனை

பாரதி ஆடிய பாரதி அரங்கத்து
திரிபுரம் எரியத்தேவர் வேண்ட
எரிமுகப் பேர் அம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடு கொட்டி ஆடலும்

எனவும்,

உமையவள் ஒரு திறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்

எனவும் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

சிலப்பதிகாரம் காட்டும் புராண இதிகாசங்கள்

உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாய் அமைந்துள்ள இம் மாநிலத்தை எட்டுத்தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பு தாங்கிக் கொண்டிருப்பதான கதையினை

''மா இரு ஞாலத்து மன் உயிர் காக்கும்
ஆயிரத்து ஓர் எட்டு அரசுதலை கொண்ட''

எனவும்,

உரவு மண் சுமந்த அரவுத்தலை பனிப்பு

எனவும் பகருகின்றது சிலப்பதிகாரம்.

எருமைக் கடாவை வாகனமாகக் கொண்டு உயிர்களைக்கவரும் எமதர்மராஜனின் தொழிலைப் பற்றிக் கூறப்படும் கதையினை,

எருமைக் கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை
ஒரு பகல் எல்லையின் உண்ணும்''

எனவும் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை காட்டும் புராண இதிகாசங்கள்

மணிமேகலையில் சைவ வைஷ்ணவ புராணக் கதைகளும் இதிகாச சம்பவங்களும் பற்பல இடங்களில் பரவலாக எடுத்தாளப் பட்டிருப்பதைக் காணலாம்.

புராணங்கள், இதிகாசங்கள் என்பவை பழைய சம்பவங்களைக்கூறி, எவ்வகையிலாவது மனித வாழ்வைச் சீர்படுத்த உதவும் பொருட்டு ஏற்பட்டவை. ஒரு தர்மத்தை அல்லது கடமையைச் செய்யும் போது இன்னல்கள் பல தோன்றும். அவற்றை எதிர்த்துப் போராடினால் 'இறுதியில் வெற்றி உண்டாகும் என்பதனை இலகுவில் தெளிவாக விளக்கவல்லவை புராண இதிகாசங்கள்.

கதைகளே உள்ளங்கை நெல்லிக்கனிபோல், மனிதருடைய மனதில் தெளிவாக விளங்குபவை. மனிதருக்கு இன்னல் ஏற்படுங்கால் அச்சந்தர்ப்பங்களில் அவற்றைக் கண்டு துயரடையாமல், சளைக்காது அத்தகைய நிலைமைகளை எளிதாகப் புரிந்து கொள்வதற்கும் இவை துணையாக அமைகின்றன.

துன்பங்கள் தோன்றுவதும், அவற்றை அனுபவிப்பதும் ஊழ்வினைப் பயனே என்பதைப் பல சந்தர்ப்பங்களில் பற்பல கதைகள் மூலம் மணிமேகலையில் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ளது.

சடாயுவுடன் பிறந்த கழுகரசனான சம்பாபதி, ஞாயிறு மண்டலத்திற்கு அருகில் சென்ற பொழுது சூரியனின் அகோர வெப்பத்தால் தன் பரந்த சிறகுகளை இழந்தான் என்பதனை.

வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாபதியிருந்த...''

எனக் கூறுகின்றது மணிமேகலை.

கவேரன் என்ற முனிவர் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவனைக் குறித்துத் தவமியற்றி, விஷ்ணுமாயையை மகளாகப் பெற்று நற்கதியடைந்ததையும், பின் அக்கன்னி நதி வடிவுற்றுக் காவேரி ஆறு என அழைக்கப்பட்டதையும்,

தவா நீர்க் காவிரிப் பாவை தன் தாதை
கவேரனாங் கிருந்த கவேரவனமும்...

எனவும்,

கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய...

எனவும் மொழிகின்றது மணிமேகலை

முருகப் பெருமான் கிரவுஞ்ச மலையைப் பிளந்த சம்பவத்தினை,

குருகு பெயர்க் குன்றம் கொன்றோனன்ன நின்
முருகச் செவ்வி ..

எனக் காட்டுகின்றது மணிமேகலை.

அசுரர் மோகங் கொண்டு வருமாறு திருமகள் கொல்லிப் பாவை உருவங்கொண்டு நடமாடிய சம்பவத்தினை,

திருவின் செய்யோன் ஆடிய பாவை

எனப் பகருகின்றது மணிமேகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாற்கடலைத் தேவர்கள் அசுரர்களுடைய உதவியுடன் கடைந்து அமிர்தத்தினை எடுத்து உண்டதனை

வெண் திரை தந்த வமுதை வானோர்
உண்டொழி...''

எனக்காட்டுகின்றது.

அரசு புரிவதை விட்டகன்று மறைபொருட்களைக் குற்றமறக்கற்றறிந்தஅந்தணராகிய விசுவாமித்திர முனிவர் பசியின் அகோரம் தாங்காது நாயிறைச்சியை உண்டதை

அசுரத்தலை நீங்கிய வருமறை யந்தணன்
இரு நில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசிகளைய வாற்றுவது காணான்
திருந்தான் நாயூன் தின்னுதலுறுவோன்

என இயம்புகின்றது.

பொன்னாலான வட்டத்தையுடைய சக்கரப்படையினை வலக்கையிற்கொண்டு, உயிர்களுக்கெல்லாம் காரண கர்த்தாவாக விளங்கும் திருமாலின் மைந்தராக நான்முகன் தோன்றி மறை நூல்களை அளித்த நிகழ்ச்சியை,

பொன்னணி நேமி வலங்கொள் சக்கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகனெமக் கருளிய
அரு மறை நன் நூல்...

என உரைக்கின்றது.

பரசுராமர் இல்லாத வேளையில், அவரின் தந்தையாகிய சமதக்கினி முனிவரை கார்த்த வீரியர்கள் என்ற அரச மைந்தர்கள் கொன்று விட்டனர். இதனால் கோபங்

கொண்ட பரசுராமர் அவ்வரச குலத்தின் இருபத்தியொரு தலைமுறைகளை அழித்தொழிப்பதாக சபதங்கொண்ட சம்பவத்தினை,

மன் மருங்கறுத்த மழுவாள் நெடியோன்

என செப்புகின்றது.

தேவர்களின் நகரமாகிய தேவலோகம் ஆழியின் கோட்பட, அதிலிருந்து நீங்கிய கூர்மையான வச்சிராயுதத்தை இந்திரன் வைத்திருந்ததை,

கடவுண் மாநகர் கடல் கொளப் பெயர்த்த
வடிவேற்றடக்கை வானவன்

எனச் சொல்கின்றது.

சக்கரவாளத்தில் உள்ள தேவர்கள் எல்லோரும் ஒருங்கே திரண்டு தேவலோகத்திலுள்ள, ஆறு உலகங்களிலொன்றான துடிதலோகத்துச் சிறந்த தேவனுடைய திருவடிகளில் சரணடைந்த புராண சம்பவத்தினை,

சக்கர வாளத்துத் தேவரெல்லாம்
தொக் கொருங் கீண்டித் துடிதலோகத்து
மிக்கோன் பாதம் விழுந்தனர்

எனக் கூறுகின்றது.

கௌதம முனிவரின் மனைவியாகிய அகலிகையின் மேல் இந்திரன் வேட்கையுற்று, அதனால் அம்முனிவரிட்ட சாபத்தால் ஆயிரங்கண் பெற்ற வரலாற்றினை.

மாதவன் மடந்தைக்கு வருந்துயரெய்தி
ஆயிரஞ் செங்கண் அமரர் கோன் பெற்றதும்

எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவன் பொருட்டால் ஆயிரங் கண்ணோன்

எனவும் இயம்புகின்றது.

திருமால் நீலவண்ணக் கண்ணனாய் அவதரித்து இடையர் சேரியில் குறும்புகள் செய்த சம்பவங்களை,

மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையின் தாமென நோக்கியும்

என மொழிகின்றது.

திருமால் வாமனனாய்த் தோன்றி மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் பெற்ற வரலாற்றினை,

நெடியோன் குறளுருவாகி நிமிர்ந்து தன்
அடியிற் படியை யடக்கிய அந்நாள்
நீரிற் பெய்த மூரிவார் சிலை
மாவலி மருமான் சீர்கொழு திருமகள்

என இயம்புகிறது,

அங்கிக் கடவுள் ஏழு முனிவர் பத்தினியரை விரும்பி, அவ்வேதனை தாங்காது வனத்திற்குச் சென்ற பொழுது அவன் மனைவியாகிய சுவாகா தேவி எழு முனிவர் பத்தினியருள் அருந்ததி தவிர்ந்த ஏனையோர் வடிவங்களைப் பூண்டு அவனுடைய வேட்கையைத் தணித்த நிகழ்ச்சியினை,

அங்கி மனையாள் அவரவர் வடிவாய்த்
தங்கா வேட்கை தனையவள் தணித்த தூஉம்

எனக் காட்டுகின்றது.

பஞ்சபாண்டவர்களும், பாஞ்சாலியும் விராட மன்னனுடைய நாட்டில் மறைந்து வாழ்ந்திருந்த போது, அவர்

களுள் அருச்சுனன், அலியுருக்கொண்டு பிருகந்நளை என்ற பெயருடனிருந்த வரலாற்றை,

விராடன் பேரூர் விசயனும் பேடியை

எனக் காட்டுகின்றது.

திருமால், இராமபிரானாய் தோன்றியதையும், அவருக்கு உதவியாக வந்த அனுமாரின் குரங்குப்படை பெரிய பாறைகளையும் மலைகளையும் கடலில் வீசி, கடலின் மேல் அணை அமைத்த இராமாயண வரலாற்றை,

நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த நெடுமலையெல்லாம்

எனவும்,

குரங்கு செய் கடற் குமரியம் பெருந்துறை...
எனவும் பகருகின்றது.

இராமன் இராவணனைப் போரிலே வென்ற செய்தியை,
மீட்சியென்பதிராமன் வென்றானென
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்

எனக் காட்டுகின்றது.

பாணாசுரனுடைய பெரிய ஊரிலேயுள்ள வீதியில் இம் மாநிலத்தை ஈரடியால் அளந்த திருமாலின் மகனெனப் போற்றப்படும் காமன், பேடிக் கோலங்கொண்டு, பேடிக் கூத்தாடியதை,

வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணிலம் அளந்தோன் மகன் முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும்

எனக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி திருமணம்

சிலப்பதிகாரம் என்னும் பாட்டுடைச் செய்யுள், கோவலன்—கண்ணகி ஆகியோருடைய மாண்பை எடுத்துக் கூறி அவர்களின் திருமண வைபவத்தை விவரித்துக் காட்டுவதாக ஆரம்பமாகின்றது. இன்று போல் அன்றும் திருமணம் ஒரு பெருவிழாவாகவே ஒவ்வொரு குடும்பத்திலும் கருதப்பட்டது. செல்வந்தர்களின் வீட்டுத்திருமணம் மிகவும் படாடோபமான முறையில் நடாத்தப்பெற்றன.

திருமணத்தைப் பெருவிழாவாகக் கொண்டாடும் ஆரிய சம்பிரதாயத்தின்படி, கண்ணகியின் பாணிக் கிரகணம், நடைபெறுவதாகச் சித்திரித்துள்ளார், இளங்கோவடிகள். இவ்வகையாக நடாத்தப்படும் பாணிக்கிரகணத்தைப் பற்றி, தொல்காப்பியம், பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

திருமண வைபவத்தில், கெடுதலை விளைவிக்கும் கோள்களின் தொடர்பு இல்லாத சந்திரனை, குற்றமற்றதெனப் போற்றப்படும் உரோகிணி என்னும் விண்மீன், அணைத்துக் கொள்ளுகின்ற நல்லதொரு நேரமே, மங்கல அணியெனப்படும் திருமாங்கல்யத்தைப் பெண்ணுக்கு, மணமகன் அணிவிக்க உகந்தவேளை என்ற கருத்தைச் சிலப்பதிகாரம் தெளிவாகக் காட்டுகின்றது.

திருமணத்தின்போது கோவலன் பதினாறு ஆண்டுப் பருவமுடையவனாகவும், கண்ணகி பன்னீராண்டு அகவையினளுமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தனர். திருமணத்தின் முன் காதல் ஒழுக்கம் இவர்கள் வாழ்வில் நிலவியதாகத் தெரியவில்லை. பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கவும், அவர்கள் செய்த ஏற்பாட்டின்படியுமே கண்ணகியின் திருமணம் நடந்தேறியது.

அவனுடைய தந்தை புகார் நகரிலே மிகச் சிறப்புடைய குடிகளுள் ஒன்றான வணிகரில் மேன்மை பெற்ற, மாசாத்துவான் என்பவன். திருமகளின் புகழ் அருந்தியின் கற்பு போன்ற மேன்மையான குணங்களை ஒருங்கே கொண்டவள் கண்ணகி. அவளுடைய தந்தையும், மன்னன் மதிக்கும் புகார் நகரின் பெருஞ் செல்வர்களில் ஒருவனான மாநாய்கன்.

செல்வம் கொழிக்கும் நகரின் சீரும் சிறப்பும் மிக்க செல்வந்தர் வீட்டுத்திருமணம் நிச்சயமாகி விட்டதை நகர மக்களுக்கு அறிவிக்க வேண்டியது மணமக்களின் பெற்றோருடைய தலையாய கடமையன்றோ? எனவே இளமங்கல மகளிர் பலரை யானையின் மீது அமரச் செய்து யானையை நகர் வலம் வரச்செய்து, கண்ணகி, கோவலன் திருமணத்தைப் புகார் நகரமக்களுக்கு அறிவிக்கச் செய்தனர்.

திருமணத்தன்று முரசுகள் இயம்பின. மத்தளங்கள் அதிர்ந்தன. மற்றும், சங்கம் போன்ற மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. இவற்றின் இனிய இசையுடன், மங்கல அணியை உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அங்கு திருமண வைபவத்தில் கலந்து கொள்ள வந்தோர் புடைசூழ, அரசரின் வெண் கொற்றக் குடையினைப் போன்றதொரு பட்டுக் குடையின் நிழலிலே, திருமணப் பந்தலுக்குக் கொண்டுவந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் சீமான்களுடைய திருமணப் பந்தல்கள் அவர்களுடைய செல்வத்தையும், நாட்டின் அன்றையச் செல்வம் கொழித்த தன்மையையும் பறைசாற்றின.

மணப்பந்தலின் மண்டபத்துத் தூண்களெல்லாம், வயிரமணிகளால் இழைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே. நறுமணங் கமழும், பலவிதமான புஷ்பமாலைகளும், சரங்களும் தொங்க விடப்பட்டிருந்தன. இம் மண்டபத்துள் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மணமேடையில், கண்ணகியும், கோவலனும் அமர்ந்திருந்தனர். முத்துப் பந்தலால் இழைக்கப்பட்டிருந்த அம்மேடையின் விதானம், விலை மதித்தற்கரிய நீலப்பட்டுக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

வானில் தவழ்ந்து கொண்டிருக்கும் சந்திரனை உரோகினி என்னும் விண்மீன் சேருகின்ற வேளையாகிய சுப நேரத்தில் கோவலன், கண்ணகியின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்து ஊரார் அறியும் வண்ணம், அவளைத் தன்னுடையவளாக்கினுன். அனுபவம் வாய்ந்த முதிய அந்தணரொருவர், வேதம் ஓதி, நெருப்புத் தணலில் நெய்யூற்றி வளர்த்த தீயினை வலம்வருமாறு மணமக்களை வழிகாட்டி, திருமணவைபவத்தை சிறப்பாக முடித்து வைத்தார். இதனைச் சிலப்பதிகாரம்,

இரு பெருங்குரவரும் ஒரு பெரு நாளால்
மண அணிகாண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை எருத்தத்து, அணி இழையார் மேல் இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம், அவ்வழி
முரசு இயம்பின : முருடு அதிர்ந்தன : முறை எழுந்தன
[பணிலம் வெண்குடை
அரசு எழுந்த தொர் படி எழுந்தன அகலுள் மங்கல
[அணி எழுந்தது

மாலை தாழ் சென்னி வயிரமணித் தூண் அகத்து
நீல விதானத்து, நித்திலப்பூம் பந்தர்க் கீழ்
வான் ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பன் மறை வழி காட்டிட
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை!

[சிலம்பு. மங்கல: 41-53]

எனக் காட்டுகின்றது.

திருமணத்தின் பின்,பல விதமான விரைகளுடன் சிலர், நானுவிதமான புஷ்பங்களைக் கொண்ட பூத்தட்டுகளுடன் சிலர், நேர்த்தியாகப் புனையப்பட்ட ஆடை அணிகளைக் கொண்ட அழகான மேனியுடையவர்கள் சிலர், அளவளாவிக் கொண்டு சிலர், இன்னிசையான மங்கலப் பாடல்களை ஒலித்துக் கொண்டு சிலர், வெட்கத்தால் தயங்கித் தயங்கி ஓரக்கண்களால் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு சிலர், இவ்வாருகப் பல குழுக்களைக் கொண்ட பெண்கள் வந்துகொண்டிருந்தனர். இவர்களின் பின்னுல் சாந்துக் கிண்ணங்களைக் கையில் ஏந்தியவாறு சிலர் வந்தனர். நறுமணங்கமழும் புகைதரும் தூப தீபங்களைச் சிலர் கொண்டு வந்தனர். கவர்ச்சியான மாலைகளுடன் வந்தனர் சிலர். இடித்துப் பொடியாக்கிய நறுமண வெண் சுண்ணத்தைத் தாங்கிவந்தனர் சிலர் ஒளி தரும் தீபங்களைத் தாங்கி வந்தனர் சிலர். நல்ல கலையழகு மிளிரும் கலங்களையும் விரிந்த பாலிகைகளைக் கொண்ட முளைக்குடங்களையும் தாங்கிவந்தனர் சிலர். நன்னீரால் நிரப்பப்பெற்ற நிறைகுடங்களைக் கொண்டு வந்தனர் இன்னுஞ் சிலர். இப்படிப் பலவாருன பொருட்களுடன் மெல்ல மெல்ல நடந்து வந்த பெண்கள், கண்ணகியை விளித்து, "காதலனைப் பிரியாமல், இணைத்த கையின் பிணைப்பு நெகிழாமல், தீமையெல்லாம் ஒழிக!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வாழ்த்தி அவளை மங்கல நல் அமளியிலே அமரச்செய்தார்கள். இதனை இளங்கோவடிகள் பின் வருமாறு கூறுகின்றார்.

விரையினர் மலரினர், விளங்குமேனியர்
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்
ஏந்து இள முலையினர், இடித்த சுண்ணத்தர்
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர், முகிழ்ந்த முரலர்
போதொடு விரிகூந்தற் பொலன்நறுங்கொடி அன்னார்
காதலற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்
தீது அறுக! என ஏத்தி சின் மலர் கொடுதூவி
அம் கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்அமளி ஏத்தினர்

(சிலம்பு: மங்கல 54-64)

இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள்

முதல், இடை, கடை என்ற முச்சங்கங்கள் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கண்ணை இமை காப்பது போன்று பழந்தமிழ் நாட்டில் போற்றிக் காத்து வளர்த்து வந்தன. முதல் இடைச் சங்கங்களில், இசை, அதனைத் தோற்றுவிக்கும் கருவிகள்; நாட்டியம், அவற்றைப் பிரதிபலிக்கும் பாவங்கள் போன்றவைகளையும் அவற்றின் நுணுக்கங்களையும் அவற்றின் அமைப்பு, பிரயோகம் முதலியவற்றை விளக்கும் நூல்கள் பல இருந்தன. அவற்றுள் இந்திர காளீயம், தூத்து நூல், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்ச பாரதீயம், முறுவல், சயந்தம், செயிற்றியம் குணநூல் போன்றவை பிரசித்தி பெற்றவை. இவை கால வெள்ளத்தாலும், ஆழியின் ஊழியினாலும் அழிந்தொழிந்துவிட்டன.

இசையைக் கண்டத்தினாலும் (தொண்டையில் உள்ள நரம்பின் அதிர்வினாலும்), இசைக் கருவிகளினாலும் தோற்றுவிக்கலாம். கண்டத்தில் பிறக்கும் இனிமையான ஒலிக்கு இசைக்கருவியினால் உண்டாக்கப் பெறும், நல்லிசை பக்கபலமாக நின்று, உறுதுணை புரிந்து, அதனைக் கேட்போருக்கு இன்பம் பயக்க வல்லது.

ஒரு பொருளின் அதிர்வினாலோ அன்றி ஒரு பொருளுடன் இன்னொன்று உராய்வதாலோ, ஒலி பிறக்கின்றது. இவ் வொலியானது ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்துடன் தாள அமைவுக்கேற்பத் தோன்றுமேயானால், அது இசை எனப் பெயர் பெறும்.

இளங்கோவடிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றியதெனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். இதன் புகார்க் காண்டத்து அரங்கேற்று காதை, கடலாடு காதை, கானல் வரி, வேனிற் காதை, மதுரைக் காண்டத்து ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் நாட்டியம், இசை, இசைக் கருவிகள் போன்றவற்றிற்கு இலக்கணம் அமைத்தாற் போன்று அமைந்துள்ளது.

அன்றும் ஏழு ஸ்வரங்கள், பன்னிரு ஸ்தானங்கள், இருபத்திரண்டு சுருதிகள் இருந்தன. தமிழிலேயே சப்த ஸ்வரங்களுக்குப் பெயர்கள் இருந்தன. இவை ச,ரி,க,ம,ப, த,நி என்ற ஏழு ஸ்வர அட்சரங்களாலேயே ஒலிக்கப்பட்டன.

ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம் தைவதம், நிஷாதம், என்பன தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்பட்டன.

பழந்தமிழ் நூல்கள் கூறும் குரல் முதலான ஏழிசைகளுக்கும் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையும், இடைக் காலத்தில் தோன்றிய இசை நூல்கள் கூறும் ஷட்ஜம் முதலான ஏழிசைகளுக்கும் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையும், தெளிவாக ஆராய்ந்து, ஒப்பு நோக்கிய யாழ் நூல் ஆசிரியரான விபுலானந்த அடிகள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை முறையே மத்திமம், பஞ்சமம் தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இன்று வழங்கப் பெறுவனவற்றிற்கு முன்பு வழங்கிய தமிழ்ப் பெயர்களாகுமெனக் கூறியுள்ளார்.

இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள்

நானிலத்தோர், தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமை கொண்ட யாழ், பண், பறை முதலான இசைக் கூறுபாடுகளைக் கொண்டிருந்ததனை சங்க நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

இளங்கோ வாழ்ந்த காலத்தில் சோழவள நாட்டின் தலை நகரான காவிரிப்பூம் பட்டினத்தின் மருவூர்ப் பாக்கத்திலே, இசை வளர்க்கும் பாணர்களுடைய இருப்பிடங்கள் இருந்தனவென்றும், அக்காலத்துப் பாணர்கள் துளைக் கருவி ஊதுவோர், தோற்கருவி வல்லுனர், கண்டத்தால் இனிய குரலெழுப்பி வாய்ப்பாட்டிசைப்போர் என நால் வகைப் பிரிவினராக இருந்தனரென்றும் சிலப்பதிகாரத்தின் இந்திர விழவு ஊர் எடுத்த காதையால் அறியலாம்.

ஆடல் மங்கை, நாடக அரங்கில் ஆடும்போது ஆடலாசிரியன், தண்ணுமை யாசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் போன்றவர்களும் பங்குபற்றும் விபரத்தினை சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இளங்கோ தெளிவாகக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம், துளைக் கருவிகள் தோற்கருவிகள், நரம்புக் கருவிகள், போன்ற இசைக்கருவிகளைப் உபயோகித்து வந்தார்களென இயம்புகின்றது.

துளைக்கருவிகள்:

துளைக்கருவிகளில் பிரசித்திபெற்றது புல்லாங்குழல் எனப்படும் இசைக்கருவி. இதனை வங்கியம், மூங்கிற் குழல், துரம்பு என்றெல்லாம் அழைப்பர். இதனை சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி போன்றவற்றாலும் செய்து இசைத்தார்களென்பதைச் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க நாதம் ஒலிக்க உபயோகப்படுத்தப்படும் வெண் சங்கும், ஒரு துளைக்கருவியே யாம். சங்கின் பின் புறத்தில் ஏற்படுத்தப்படும் துவாரத்தில், வாயை வைத்து ஊதும் பொழுது, ஏற்படும் ஒலியின் அதிர்ச்சியால், சங்கொலி விண்ணதிரக் கேட்கும். சங்கிற்குப் பல விதமான உலோகங்களினால், அழகான அலங்கார வேலைப்பாடுகள் செய்து வைத்திருப்பது பண்டைக்காலத்து வழக்கம்.

குழலை இசைக்கருவியாக இசைக்கும் குழலோனின் இலக்கணத்தை சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை தெளிவாகக் காட்டுகின்றது.

கொன்றைக்குழல் போன்றவை ஊது குழலாக இசைக்கப்பட்டு வந்ததனைப் பின் வருமாறு காட்டுகின்றது சிலப்பதிகாரம்

கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி.

நரம்புக் கருவிகள்.

நரம்புக் கருவிகளுள் யாழ் என்னும் இசை நல்கும் கருவி மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. பல தரப்பட்ட யாழ் வகைகள் இசைக்கருவிகளாக இசைக்கப்பட்டன. அவற்றுள் பேரி யாழ் 21 நரம்புகளையும், மகரயாழ் 19 நரம்புகளையும், சகோடயாழ் 14 நரம்புகளையும் செங்கோட்டி யாழ் 7 நரம்புகளையும் கொண்டவையாகும்.

சிலப்பதிகார உரைப்பாயிரம் "பெருங்கலமாவது பேரி யாழ். அது கோட்டினதளவு பன்னிருசாணும். வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும் இப்பெற்றிக் கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று ஆயிரங் கோல்

இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள்

முதல், இடை, கடை என்ற முச்சங்கங்கள் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கண்ணை இமை காப்பது போன்று பழந்தமிழ் நாட்டில் போற்றிக் காத்து வளர்த்து வந்தன. முதல் இடைச் சங்கங்களில், இசை, அதனைத் தோற்றுவிக்கும் கருவிகள்; நாட்டியம், அவற்றைப் பிரதிபலிக்கும் பாவங்கள் போன்றவைகளையும் அவற்றின் நுணுக்கங்களையும் அவற்றின் அமைப்பு, பிரயோகம் முதலியவற்றை விளக்கும் நூல்கள் பல இருந்தன. அவற்றுள் இந்திர காளீயம், தூத்து நூல், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்ச பாரதீயம், முறுவல், சயந்தம், செயிற்றியம் குணநூல் போன்றவை பிரசித்தி பெற்றவை. இவை கால வெள்ளத்தாலும், ஆழியின் ஊழியினாலும் அழிந்தொழிந்துவிட்டன.

இசையைக் கண்டத்தினாலும் (தொண்டையில் உள்ள நரம்பின் அதிர்வினாலும்), இசைக் கருவிகளினாலும் தோற்றுவிக்கலாம். கண்டத்தில் பிறக்கும் இனிமையான ஒலிக்கு இசைக்கருவியினால் உண்டாக்கப் பெறும், நல்லிசை பக்கபலமாக நின்று, உறுதுணை புரிந்து, அதனைக் கேட்போருக்கு இன்பம் பயக்க வல்லது.

ஒரு பொருளின் அதிர்வினாலோ அன்றி ஒரு பொருளுடன் இன்னொன்று உராய்வதாலோ, ஒலி பிறக்கின்றது. இவ் வொலியானது ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்துடன் தாள அமைவுக்கேற்பத் தோன்றுமேயானால், அது இசை எனப் பெயர் பெறும்.

இளங்கோவடிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றியதெனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். இதன் புகார்க் காண்டத்து அரங்கேற்று காதை, கடலாடு காதை, கானல் வரி, வேனிற் காதை, மதுரைக் காண்டத்து ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் நாட்டியம், இசை, இசைக் கருவிகள் போன்றவற்றிற்கு இலக்கணம் அமைத்தாற் போன்று அமைந்துள்ளது.

அன்றும் ஏழு ஸ்வரங்கள், பன்னிரு ஸ்தானங்கள், இருபத்திரண்டு சுருதிகள் இருந்தன. தமிழிலேயே சப்த ஸ்வரங்களுக்குப் பெயர்கள் இருந்தன. இவை ச,ரி,க,ம,ப, த,நி என்ற ஏழு ஸ்வர அட்சரங்களாலேயே ஒலிக்கப் பட்டன.

ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம் தைவதம், நிஷாதம், என்பன தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்பட்டன.

பழந்தமிழ் நூல்கள் கூறும் குரல் முதலான ஏழிசைகளுக்கும் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையும், இடைக் காலத்தில் தோன்றிய இசை நூல்கள் கூறும் ஷட்ஜம் முதலான ஏழிசைகளுக்கும் கூறப்பட்டுள்ள இலக்கணங் களையும், தெளிவாக ஆராய்ந்து, ஒப்பு நோக்கிய யாழ் நூல் ஆசிரியரான விபுலானந்த அடிகள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை முறையே மத்திமம், பஞ்சமம் தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இன்று வழங்கப் பெறுவனவற்றிற்கு முன்பு வழங்கிய தமிழ்ப் பெயர்களாகுமெனக் கூறியுள்ளார்.

இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள்

நானிலத்தோர், தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமை கொண்ட யாழ், பண், பறை முதலான இசைக் கூறுபாடுகளைக் கொண்டிருந்ததனை சங்க நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

இளங்கோ வாழ்ந்த காலத்தில் சோழவள நாட்டின் தலை நகரான காவிரிப்பூம் பட்டினத்தின் மருவூர்ப் பாக்கத்திலே, இசை வளர்க்கும் பாணர்களுடைய இருப் பிடங்கள் இருந்தனவென்றும், அக்காலத்துப் பாணர்கள் துளைக் கருவி ஊதுவோர், தோற்கருவி வல்லுனர், கண்டத்தால் இனிய குரலெழுப்பி வாய்ப்பாட்டிசைப்போர் என நால் வகைப் பிரிவினராக இருந்தனரென்றும் சிலப் பதிகாரத்தின் இந்திர விழவு ஊர் எடுத்த காதையால் அறியலாம்.

ஆடல் மங்கை, நாடக அரங்கில் ஆடும்போது ஆட லாசிரியன், தண்ணுமை யாசிரியன், வேய்ங்குழல் ஊது வோன், யாழ் ஆசிரியன் போன்றவர்களும் பங்குபற்றும் விபரத்தினை சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இளங்கோ தெளிவாகக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம், துளைக் கருவிகள் தோற்கருவிகள், நரம் புக் கருவிகள், போன்ற இசைக்கருவிகளைப் உபயோகித்து வந்தார்களென இயம்புகின்றது.

துளைக்கருவிகள்:

துளைக்கருவிகளில் பிரசித்திபெற்றது புல்லாங்குழல் எனப்படும் இசைக்கருவி. இதனை வங்கியம், மூங்கிற் குழல், துரம்பு என்றெல்லாம் அழைப்பர். இதனை சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி போன்றவற்றாலும் செய்து இசைத்தார்களென்பதைச் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க நாதம் ஒலிக்க உபயோகப்படுத்தப்படும் வெண் சங்கும், ஒரு துளைக்கருவியே யாம். சங்கின் பின் புறத்தில் ஏற்படுத்தப்படும் துவாரத்தில், வாயை வைத்து ஊதும் பொழுது, ஏற்படும் ஒலியின் அதிர்ச்சியால், சங்கொலி விண்ணதிரக் கேட்கும். சங்கிற்குப் பல விதமான உலோகங்களினால், அழகான அலங்கார வேலைப்பாடுகள் செய்து வைத்திருப்பது பண்டைக்காலத்து வழக்கம்.

குழலை இசைக்கருவியாக இசைக்கும் குழலோனின் இலக்கணத்தை சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை தெளிவாகக் காட்டுகின்றது.

கொன்றைக்குழல் போன்றவை ஊது குழலாக இசைக்கப்பட்டு வந்ததனைப் பின் வருமாறு காட்டுகின்றது சிலப்பதிகாரம்

கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி.

நரம்புக் கருவிகள்.

நரம்புக் கருவிகளுள் யாழ் என்னும் இசை நல்கும் கருவி மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. பல தரப்பட்ட யாழ் வகைகள் இசைக்கருவிகளாக இசைக்கப்பட்டன. அவற்றுள் பேரி யாழ் 21 நரம்புகளையும், மகரயாழ் 19 நரம்புகளையும், சகோடயாழ் 14 நரம்புகளையும் செங்கோட்டி யாழ் 7 நரம்புகளையும் கொண்டவையாகும்.

சிலப்பதிகார உரைப்பாயிரம் "பெருங்கலமாவது பேரியாழ். அது கோட்டினதளவு பன்னிருசாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும் இப்பெற்றிக் கேற்ற ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று ஆயிரங் கோல்

தொடுத்தியல்வது." என்று கூறுகின்றது. எனவே பெருங்கலம் எனப்படும் பெரிய பேரியாழ் ஆயிரம் நரம்புகளை உடையதாய் விளங்கிற்றென அறியலாம்.

யாழினை இசைக்கும் யாழிசைப்போன், எவ்வாறு யாழை இசைக்கேற்றவாறு மீட்கவேண்டும் என்ற கோட்பாட்டினை, அரங்கேற்று காதையிலும், புறஞ்சேரி இறுத்த காதையிலும் விரிவாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பொதுவாக யாழ், குழலோடு இசையவே ஒலிக்கப்பட்டது.

குழல், யாழ், சங்கம் போன்றவை இசைக்கப்பட்டதனை சிலப்பதிகாரம் பின் வருமாறு காட்டுகின்றது:

குழலும், யாழும் அமிழ்தும் குழைத்த...
யாழும், குழலும் சீரும், மிடரும்...
வாங்கிய வாரத்து யாழும், குழலும்...
குழல் வளர் முல்லையிற் கோவலர்...
முள்வாய்ச் சங்கம் முறை முறை ஆர்ப்ப...
குழலினும், யாழினும் குரல் முதல் எழும்...
கோடும், குழலும்...
வயிரொடு துவை செய...
வால் வெண்சங்கொடு ..
......வால்வளை...
கோடு வாய் வைம்மின்...
நாரதன் வீணை நயம் தெரி பாடலும்...
மங்கலம் இழப்ப வீணை...
திருந்து கோல் நல்யாழ்...
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத் திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இசை...

பிழையா மரபின் ஈர் ஏழ் கோவையை...
அணைவுறக் கிடந்த யாழின் தொகுதியும்
ஈர் ஏழ் சகோடமும்...
நல்லியாழ்ப் பாணர்...
செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்...
குயிலுவருள் நாரதனுர் கொளைபுணர் சீர் நரம்பு
உளர்வார்...
வணர் கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீ இல்
புணர்புரி நரம்பிற் பொருள்படு பத்தர்...
...வணர் கோட்டு யாழும்...

தோற் கருவிகள்:

மிருகங்களின் தோலினைப் பதப்படுத்தி இசைக் கருவிகளில் பொருத்தி இசையை உண்டாக்கி மகிழ்ந்தனர் பண்டையத் தமிழ் மக்கள். சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லார் முப்பத்தொரு வகையான தோற்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார். தோற் கருவிகளை இசைக்கும் தண்ணுமை முதல்வன், இசை நிகழ்ச்சியின் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளையும், கடமைகளையும் அரங்கேற்றுகாதை தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றது.

முரசு இயம்பின முருடு அதிர்ந்தன...
தாழ் குரல் தண்ணுமை...
ஓங்கிய மிடரும் இசைவன கேட்ப...
பண் அமை முழவின் கண் எறி அறிந்து
தண்ணுமை முதல்வன்...
முரசு எழுந்து இயம்ப பல் இயம் ஆர்ப்ப...

இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள்

தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின் வழி நின்றது முழவே முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை...
புன் வாய் முரசமொடு...
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்...
முழவுக் கண் துயிலாது...
ஆறெறி பறையும், சூறைச் சின்னமும்...
துடியொடு சிறு பறை...
காலை முரசக் கனைகுரல் ஓதையும்...
வாளோர் எடுத்த நாள் அணி முழவமும்
காலை முரசங் கனைகுரல் இயம்ப
முறைசொடு வெண்குடை
தண்ணுமை முழவம்
யானை எருத்தத்தை அணி முரசு இரீஇ
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
பொருநர் ஆர்ப்பொடு முரசெழுந்து ஒலிப்ப
வடித்தோற் கொடும் பறை வால்வளை, நெடுவயிர்
இடிக்குரல் முரசம் இழுமென் பாண்டில்
மண் கணை முழவும்.

கஞ்சக் கருவிகள்:

உலோகங்களால் செய்யப்பட்ட தாளவகைகள் கஞ்சக் கருவிகள் எனப் பெயர் பெற்றன. இவை ஒன்றோடு ஒன்று உராய்வதாலும், மோதுவதாலும் ஒலியை ஏற்படுத்துவன. இதனைப் பின் வரும் சிலப்பதிகார அடிகளில் காணலாம்.

......பீடு கெழு மணியும்...
கடை மணியின் குரல்...
நம் கோன் தன் கொற்ற வாயில்
மணி நடுங்க...
வாயிற் கடை மணி நடுங்கா நடுங்க...
மணி நா ஓசை கேட்டலும் இலனே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை காட்டும் பௌத்த நெறி

பாரத நாட்டில் தோன்றிய பௌத்தமதம், இன்று' அதன் அண்டைய நாடுகளிலேதான் செழிப்புற்று விளங்கி வருகின்றது. அசோகச் சக்கரவர்த்தியின் காலத்திலேதான் பௌத்தசமயம் தமிழ் நாட்டிலும், அதன் அண்டைய நாடுகளிலும் பரவத்தொடங்கியது, என்பது பொதுவான கருத்தாகும்.

தமிழ்நாட்டில் பௌத்தமதப் பிரசாரங்கள் தொடங்கிய போது அன்றையத்தமிழர்கள் அதனை இலகுவில் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய வாழ்க்கை இலட்சியங்களுக்கும், பௌத்தம் கூறிய கோட்பாடுகளுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டன.

அன்றையத் தமிழர் வீரம் போற்றிக் காவியங்கள் புனைந்தனர். வீரச் செயல்களிலெல்லாம் வெற்றிகிட்ட வேண்டுமெனத் தங்கள் குலதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுத்தனர். வீரச் செயல்களில் வெற்றி பெற்ற பின்னரும் அதற்குப் பிரதியுபகாரமாகவும் உயிர்பலி கொடுத்தனர். தமிழ் மக்கள் அனைவரும் புலாலை விரும்பி உண்டனர். காதலைப்போற்றி அதனையும் தம் வாழ்க்கையின் குறிக்கோள்களில் ஒன்ருகக் கருதினர். இந் நிலையில் தான் பௌத்தமதம், தமிழ் நாட்டினுள் புகுந்து, கொலை செய்யாமை, ஊன் உண்ணுமை துறவறம் போன்றவற்றையெல்லாம் போதித்தது.

தொடுத்தியல்வது.'' என்று கூறுகின்றது. எனவே பெருங் கலம் எனப்படும் பெரிய பேரியாழ் ஆயிரம் நரம்புகளை உடையதாய் விளங்கிற்றென அறியலாம்.

யாழினை இசைக்கும் யாழிசைப்போன், எவ்வாறு யாழை இசைக்கேற்றவாறு மீட்கவேண்டும் என்ற கோட்பாட்டினை, அரங்கேற்று காதையிலும், புறஞ்சேரி இறுத்த காதையிலும் விரிவாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பொதுவாக யாழ், குழலோடு இசையவே ஒலிக்கப் பட்டது.

குழல், யாழ், சங்கம் போன்றவை இசைக்கப்பட்டதனை சிலப்பதிகாரம் பின் வருமாறு காட்டுகின்றது:

குழலும், யாழும் அமிழ்தும் குழைத்த...
யாழும், குழலும் சீரும், மிடரும்...
வாங்கிய வாரத்து யாழும், குழலும்...
குழல் வளர் முல்லையிற் கோவலர்...
முள்வாய்ச் சங்கம் முறை முறை ஆர்ப்ப...
குழலினும், யாழினும் குரல் முதல் எழும்...
கோடும், குழலும்...
வயிரொடு துவை செய...
வால் வெண்சங்கொடு ..
......வால்வளை...
கோடு வாய் வைம்மின்...
நாரதன் வீணை நயம் தெரி பாடலும்...
மங்கலம் இழப்ப வீணை...
திருந்து கோல் நல்யாழ்...
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத் திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இசை...
பிழையா மரபின் ஈர் ஏழ் கோவையை...
அணைவுறக் கிடந்த யாழின் தொகுதியும்
ஈர் ஏழ் சகோடமும்...
நல்லியாழ்ப் பாணர்...
செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்...
குயிலுவருள் நாரதனுர் கொளைபுணர் சீர் நரம்பு
உளர்வார்...
வணர் கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீ இல்
புணர்புரி நரம்பிற் பொருள்படு பத்தர்...
...வணர் கோட்டு யாழும்...

தோற் கருவிகள்:

மிருகங்களின் தோலினைப் பதப்படுத்தி இசைக் கருவிகளில் பொருத்தி இசையை உண்டாக்கி மகிழ்ந்தனர் பண்டையத் தமிழ் மக்கள். சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லார் முப்பத்தொரு வகையான தோற்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார். தோற் கருவிகளை இசைக்கும் தண்ணுமை முதல்வன், இசை நிகழ்ச்சியின் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளையும், கடமைகளையும் அரங்கேற்றுகாதை தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றது.

முரசு இயம்பின முருடு அதிர்ந்தன...
தாழ் குரல் தண்ணுமை...
ஓங்கிய மிடறும் இசைவன கேட்ப...
பண் அமை முழவின் கண் எறி அறிந்து
தண்ணுமை முதல்வன்...
முரசு எழுந்து இயம்ப பல் இயம் ஆர்ப்ப...

தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின் வழி நின்றது முழவே முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை...
புன் வாய் முரசமொடு...
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்...
முழவுக் கண் துயிலாது...
ஆறெறி பறையும், சூறைச் சின்னமும்...
துடியொடு சிறு பறை...
காலை முரசக் கனைகுரல் ஓதையும்...
வாளோர் எடுத்த நாள் அணி முழவமும்
காலை முரசங் கனைகுரல் இயம்ப
முரைசொடு வெண்குடை
தண்ணுமை முழவம்
யானை எருத்தத்தை அணி முரசு இரீஇ
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
பொருநர் ஆர்ப்பொடு முரசெழுந்து ஒலிப்ப
வடித்தோற் கொடும் பறை வால்வளை, நெடுவயிர்
இடிக்குரல் முரசம் இழுமென் பாண்டில்
மண்கணை முழவும்.

கஞ்சக் கருவிகள்:

உலோகங்களால் செய்யப்பட்ட தாளவகைகள் கஞ்சக் கருவிகள் எனப் பெயர் பெற்றன. இவை ஒன்ருேடு ஒன்று உராய்வதாலும், மோதுவதாலும் ஒலியை ஏற்படுத்துவன. இதனைப் பின் வரும் சிலப்பதிகார அடிகளில் காணலாம்.

......பீடு கெழு மணியும்...
கடை மணியின் குரல்...
நம் கோன் தன் கொற்ற வாயில்
மணி நடுங்க...
வாயிற் கடை மணி நடுங்கா நடுங்க...
மணி நா ஓசை கேட்டலும் இலனே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை காட்டும் பௌத்த நெறி

பாரத நாட்டில் தோன்றிய பௌத்தமதம், இன்று அதன் அண்டைய நாடுகளிலேதான் செழிப்புற்று விளங்கி வருகின்றது. அசோகச் சக்கரவர்த்தியின் காலத்திலேதான் பௌத்தசமயம் தமிழ் நாட்டிலும், அதன் அண்டைய நாடுகளிலும் பரவத்தொடங்கியது, என்பது பொதுவான கருத்தாகும்.

தமிழ்நாட்டில் பௌத்தமதப் பிரசாரங்கள் தொடங்கிய போது அன்றையத் தமிழர்கள் அதனை இலகுவில் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய வாழ்க்கை இலட்சியங்களுக்கும், பௌத்தம் கூறிய கோட்பாடுகளுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டன.

அன்றையத் தமிழர் வீரம் போற்றிக் காவியங்கள் புனைந்தனர். வீரச் செயல்களிலெல்லாம் வெற்றிகிட்ட வேண்டுமெனத் தங்கள் குலதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுத்தனர். வீரச் செயல்களில் வெற்றி பெற்ற பின்னரும் அதற்குப் பிரதியுபகாரமாகவும் உயிர்ப்பலி கொடுத்தனர். தமிழ் மக்கள் அனைவரும் புலாலை விரும்பி உண்டனர். காதலைப்போற்றி அதனையும் தம் வாழ்க்கையின் குறிக்கோள்களில் ஒன்றாகக் கருதினர். இந் நிலையில் தான் பௌத்தமதம், தமிழ் நாட்டினுள் புகுந்து, கொலை செய்யாமை, ஊன் உண்ணாமை துறவறம் போன்றவற்றையெல்லாம் போதித்தது.

பின் பௌத்தமதம் தமிழ் நாட்டில் வளர்ச்சியுற்றுச் செழிப்படைந்த காலத்தில்,தமிழ் மொழியில்பௌத்த சமய இலக்கிய நூல்கள் தோன்றி, தமிழ் இலக்கிய வளர்ச்சியைத் துரிதப்படுத்தின. அவ்வாறான பேரிலக்கியங்களுள் ஒன்றான மணிமேகலை ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

பௌத்த தர்மத்தின் அடிப்படைகள், பொய்,காமம், கொலை, களவு ஆகியவற்றை அறவே நீக்குவது. இதனைப் பஞ்சசீலம் என்பர். இதனை மணிமேகலை:

> கள்ளும் பொய்யும், காமமும் கொலையும்
> உள்ளக் களவும் என்று உரவோர் துறந்தவை''
> (24-77-78)

எனக் கூறுகின்றது.

மனிதருடைய உடல் ஊழ்வினை காரணமாகத்தோன்றுவது. மேன்மேலும் கரும வினைகளுக்கு உட்படுவது. முதுமையும், அழிவும் ஏற்படுத்த வல்லது. பல் விதமான பற்றுகள் பற்றிக்கொள்ள இலக்காக அமைவது. கோப தாப உணர்ச்சிகள், குற்றங்குறைகள் ஆகியன உருவாகக் காரணமாய் அமைவது, என்பன போன்ற பௌத்தமதக் கோட்பாடுகளில் சிலவற்றை மணிமேகலை பின் வருமாறு கூறுகின்றது.

> வினையின் வந்தது வினைக்கு வினையாவது
> புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
> மூப்பு வளியுடையது தீப்பிணி இருக்கை
> பற்றின் பிறப்பிடம் குற்றக்கொள் கலம்
> புற்றடங்கரவிற் செற்றச் சேக்கை
> அவலக் கவலை கையாறழுங்கல்
> தவலா உள்ளம் தன்பாலுடையது
> மக்கள் யாக்கையிது

'இளமை, உடல், செல்வம் போன்றவையெல்லாம் அழியக்கூடியவை. ஒருவன் செய்யும் அறமே நிலைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க வல்லது, என்ற பௌத்த மதக் கருத்தினை மணி மேகலை பின்வருமாறு காட்டுகின்றது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுதுணையாவது

பௌத்த மத தர்மத்தை மணிமேகலை பவத்திறமறு கெனப் பாவைநோற்ற காதையில் மிக விரிவாகக் கூறி யிருப்பதைக் காணலாம். இதனைத் திரும்பவும் ஆபுத்தி ரூடு அடைந்த காதையில் அப்படியே கூறியிருப்பதும் நோக்கற்பாலது.

பௌத்த தர்மத்தின் பன்னிரு நிதானங்களை (சார்பு களை) பின் வருமாறு மணிமேலை காட்டுகின்றது.

பேதைமை செய்கையுணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல் பீராறும்
பிறந்தோர் அறியிற் பெரும்பேறறிகுவர்
அறியாராயின் ஆழ் நரகறிகுவர்
(24 : 105 – 110)
(30 : 45 –50)

துன்பத்திற்குக் காரணமான இப்பன்னிரு நிதானங் களின் தன்மைகளை மணிமேகலை பின்வருமாறு காட்டு கின்றது.

பேதைமை சார்வாச் செய்கையாகும்
செய்கை சார்வா உணர்ச்சியாகும்
உணர்ச்சி சார்வா வாயிலாகும்
அருவுரு சார்வா வாயிலாகும்
வாயில் சார்வா ஊறுகும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்

நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்
வேட்கை சார்ந்து பற்றுகும்மே
பற்றிற்றேன்றும் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரணமாக
வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்
தோற்றஞ் சார்பின் மூப்புப் பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலைகை யாறெனத்
தவலில் துன்பந் தலைவரும் என்ப. (30:104–117)

மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுக்காத, பிறவா மையே பேரின்பம் என்பதனை மணிமேகலை

பேதைமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள அருவுரு மீளும்
அருவுரு மீள வாயில் மீளும்
வாயில் மீள ஊறு மீளும்
ஊறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளும். கருமத்தொகுதி மீளத்
தோற்றம் மீளும். தோற்றம் மீளப்
பிறப்பு மீளும். பிறப்புப் பிணி மூப்புச்
சாக்காடவலம் அரற்றுக் கவலை
கையாறென்றிக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும் (30: 119-133)

ஊழ்வினை (கர்மவினை), மறுபிறப்பு ஆகியவற்றை வற் புறுத்திக் கூறுகின்றது பௌத்தமதம். ஓர் உயிரானது அதன் கர்மங்களுக்கேற்பப் பல பிறவிகளை எடுக்கவேண்டுமென்ற பௌத்தமதக் கொள்கையினைப் பல சந்தர்ப்பங் களில் மணிமேகலையில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். பிறவிகளே எடுக்காத ஒரு நிலைதான் மிகச்சிறந்தது என்ற கருத்தினை மணிமேகலை கீழ்க்காணுமாறு காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது.

ஊழ்வினையைப் பற்றிக் கூறும் பொழுது மணிமேகலை பின்வருமாறு காட்டுகின்றது.

பிணங்கு நான் மார்பன் பேதுகந்தாக
ஊழ்வினை வந்திவனுயிருண்டு கழிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org